விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை (11.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 144

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

## அதிகாலை வேளையில் புலிகள் அதிரடித் தாக்குதல்

# கடற்படையின் ஆயுதக் கப்பல் திருமலையில் வெடித்து மூழ்கியது

(திருகோணமலை)

**காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் படையினருக்கான விநியோகத்தில் ஈடுபட்டுவந்த கடற்படைக் கப்பல் நேற்று அதிகாலை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்தில் தரித்து நின்ற போது நீருக்கடியில் இடம்பெற்ற தாக்குதலின் மூலம் வெடித்துச் சிதறி கடலில் முற்றாக மூழ்கியது.**

**இக்கப்பலில் பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள் இருந்ததாக சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன.** (10ஆம் பக்கம் பார்க்க)




மூழ்கடிக்கப்பட்ட கப்பலின் படத்தைக் காண்கிறீர்கள். (இது 2005இல் எடுக்கப்பட்ட படம்)

# வன்முறைகள்; மோசடிகள் மத்தியில் கிழக்குத் தேர்தல் நடந்து முடிந்தது

(மட்டக்களப்பு)

கிழக்கு ம்ாகாண சபைத்தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகிய அதேநேரம் பல்வேறு இடங்களில் மோசமான தேர்தல் மோசடிகளும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும்



## 60 சதவீத வாக்குப்பதிவென அறிவிப்பு

அமைக்கப்பட்ட ஆயிரத்து 270 வாக்களிப்பு நிலையங்களில் நேற்றுச் சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெற்றதாக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மாவட்டத்தில்தேர்தல் கடமைகளில் சுமார் 5 ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 394 வாக்களிப்பு நிலையங்களும் 46 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு 46 உதவி தெரிவத்தாட்சி அதிகாரிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு என்றும் இல்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது. இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஆயுதம் தரித்த 5 பொலிஸார் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

வாக்காளர்கள், பொலிஸாரினால் உடற் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். திறந்த வெளியிலேயே உடற்பரிசோதனை செய்யப்பட்டதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதாகக் கூறினர். தமிழ்ப் பகுதிகளை விட முஸ்லிம் பகுதிகளிலேயே வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றது.

மட்டு.இந்துக் கல்லூரியில் இருந்தே வாக்குப் (10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

### அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வரவேற்கத்தக்க வகையில் மக்கள வாக்களிப்பில் கலந்து கொண்டமை ஜனநாயகத்திற்கு க்டைத்த பெரு வெற்றி என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை (10ஆம் பக்கம் பார்க்க)

## முறைகேடுகள் குறித்து விசாரணை இடம்பெறுமாம்

### நாடாளுமன்றை கூட்டுமாறு ஐ.தே.க அவசர கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முறைகேடுகள்.வன்முறைகள், ஆள்மாறாட்டங்கள் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க விசேட விசாரணை மேற்கொள்ள இருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பாரிய முறைகேடுகள் நடந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளன.

அத்துடன் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் தேர்தல் வன்முறைகள் குறித்த தமது கவலையை வெளியிட்டுள்ளதுடன் தேர்தல் வன்முறைகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளன என்று தெரிய வருகிறது. (10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.தபால் மூல வாக்கு ஆளும் கூட்டணி முன்னணியில்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இன்று அதிகாலை 12.45இல் இருந்து அறிவிக்கப்பட்டது.

தபால் மூல வாக்கெடுப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 2ஆயிரத்து 159 வாக்குகளையும், ஐ.தே.கட்சி ஆயிரத்து 282 வாக்குகளையும் தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி 454 வாக்குகளையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 135 வாக்குகளையும் பெற்றிருந்தன. (ந-5)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடந்த கிரிக்கெட் போட்டிக்கு முன்னதாக விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும்,கல்லூரிக் கொடி ஏற்றி வைக்கப்படுவதையும்,துடுப்பாட்ட வீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இ.சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை யாழ்.இந்துக்கல்லூரி அணி சுவீகரித்தது

## கொக்குவில் இந்துவும் சளைக்காமல் போராடியது

(யாழ்ப்பாணம்)

விறுவிறுப்பாக நடைபெற்ற இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் துடுப்பாட்டப்போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்ளதது.

யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான முதலாவது இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் துடுப்பாட்டப்போட்டி நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணித் தலைவர் தி.கௌசிகன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி ஒரு கட்டத்தில் 27.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 108 ஓட்டங்களை மாத்திரமெடுத்த போதும் க.சுரேஸ்குமார்,அ.பிரியதர்சன்,சங்கீதன் மற்றும் ந.சுதாகரன் ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தினால் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சங்கீதன் ஆட்டமிழக்காமல் (4 பவுண்டரிகள் உட்பட) 32 ஓட்டங்களையும் பிரியதர்சன் (2 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களையும் சுரேஸ்குமார் 3 பவுண்டரி உட்பட 27 ஓட்டங்களையும் சுதாகரன்(2 பவுண்டரி ஒருசிக்ஸர் உட்பட) 25 ஓட்டங்களையும் மற்றும் பவசுதன் 23, உமாகரன் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக ஆரம்பப் பந்து வீச்சாளர் எஸ்.நிரோஜன் 9 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஆர்.ஏரகன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 40 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஆர்.நிரூஜன் , எஸ். ஜனுகுலன் கே.நிரோஜன் மற்றும் பி.தீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 223 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, ஆர்.நிரூஜன் அரைச்சதம் கடந்து இறுதிவரை போராடியபோதும் 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 13 ஓட்டங்கள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தது.

இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஆர்.நிருஜன் (9 பவுண்டரிகள் உட்பட) 72 ஓட்டங்களையும். இ.நிதர்சன் (3பவுண்டரிகள் உட்பட) 26 ஓட்டங்களையும் கே.நிரோஜன் (ஒரு பவுண்டரி ஒரு சிக்ஸர் உட்பட)20ஓட்டங் களையும் ஏரகன் 20 ஓட்டங்களையும் மற்றும் அணித் தலைவர் இ.வாகிஸ் 18 , துவாரகன் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய கே.சுரேஸ்குமார் 6.4 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக் களையும், எஸ்.உமாதரன் 9 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஏ.பிரியதர்சன் 8 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் மற்றும் அணித்தலைவர் கே.கௌசிகன், பி.சங்கீதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் முதலாவது இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை யாழ் இந்துக் கல்லூரி அணி சுவீகரித்தது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ் இந்துக் கல்லூரி அணி கே.சுரேஸ்குமார் தெரிவானார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் ஆர்.நிரூஜனும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரி அணியின் எஸ்.உமாதரனும், களத் தடுப் பாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியின் தலைவர் இ.வாகிஸும் தெரிவானார்கள். (ந-5)


A/L பௌதிகவியல் இணைந்த கணிதம் வகுப்புகள்

பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களை பிரபல கல்லூரிகளில் சிறப்பாக கற்பித்து பரீட்சகராகவும்அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொ.பே. 0776648751
ஆசிரியர்:- R .பாலசுப்பிரமணியம் Bsc(cey) Dip.in.Ed.
42/1 ,இந்துக்கல்லூரி ஒழுங்கை ,நீராவியடி,
(1166) (வசந்தாடெக்ஸ்டைல் அருகில்) யாழ்ப்பாணம்.

நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

நல்ல இன அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
B.L.மோகனகுமார்,
கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை. (C-1099)

மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் 33 வயது, ரேவதி நட்சத்திரம், பாவம் 141/2, உயரம் 58" U.K, P.R உடைய Supervisor ஆக கொம்பனியில் வேலை பார்க்கும் மணமகனுக்கு U.K இல் இருக்கும், அங்கு செல்ல விருப்பமுடைய தகுந்த ஓரளவு படித்த அழ்கான மணமகள் தேவை முழு விபரங்களுடன் விண்ணப் பிக்கவும்

விளம்பர இல-1160,
மே/பா .வலம்புரி ,
இல.03,2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
(1160) யாழ்ப்பாணம்.

WANTED

M.O/R.M.O. FULL TIME /PART TIME
APPLY,
DIRECTOR,
CENTRAL NURSING HOME (PVT)
350, PALALY ROAD,
JAFFNA. (1149)

சேகர் மோட்டோர்ஸ்
SEGAR MOTORS

அன்பான வாடிக்கையாளர்களே!
தங்கள் வசதி கருதி எமது நிறுவனமாகிய
சேகர் மோட்டோர்ஸ்
இணை நிறுவனத்தை
17ஆம் இலக்கம், ஸ்ரான்லி வீதியில்,
(செம்மா தெருவுக்கு அண்மையில்) ஆரம்பித்துள்ளோம்.
தங்கள் ஆதரவை நாடும்.
(சி/1097) நிர்வாகம்.

கலாலயா
பயிற்சியகம்
( பெருமாள் கோயிலுக்கு அண்மையில் )

மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்

கேக் அலங்காரம் : பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மண்ட் ஐஸிங், Frosting Icing, மாச்சீனி மலர்கள் (Sugar Flowers). Fondant ஐசிங், Water Icing.

உணவு தயாரித்தல் : பலவகையான உணவுகள், சிற்றுண்டிகள் சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மேசை அலங்காரம் செய்தல்.

கூந்தல் அலங்காரம் : பல வகையான கொண்டைகள் போடுதல், Dressing.

பப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கதிரை விரிப்புக்களில், சேலையில் (Saree Painting) கண்ணாடியில் வர்ணம் தீட்டுதல்.

கை வேலை : கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல் (Soft Toys) கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள், றிபன் வேலை, மற்றும் பல.

பூ வேலை : கடதாசியினாலும் Paper Ribbon ஆலும் மலர்கள் செய்தல், மலர்ச் செண்டுகள் (Bouquet) செய்தல், கயாபா றிபன் மலர்கள் செய்தல்.

Facial : அடிப்படை முக அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும்(அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது.)

6 மாத காலை உடை தயாரித்தல் (தையற் கலை) பயிற்சிகள்

அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ், சுரிதார் தைத்தல், பூப்போடுதல்.

- 3 பாடங்களுக்கு மேல் பயில்பவர்கள் தவணைமுறையில் கட்டணம் செலுத்தலாம்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
- பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 18-05-2008
கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 19-05-2008

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம். பதிவாளர்.


# 2 ஆண்டுக்கு பிறகு மீண்டும் பளிச் ஆர்யா



டைரக்டர் பாலா இயக்கும் நான் கடவுள் படத்துக்காக நீண்ட தலை முடி,தாடி என்று ஆளே மாறிப்போய் இருக்கிறார் ஆர்யா.

2ஆண்டுகளுக்குப் பிறகு ஆர்யா மீண்டும் பளிச் முகத்துக்கு மாறியிருக்கிறார். கதை பிரச்சினை, கதாநாயகி பிரச்சினை என்று பல பிரச்சினைகளை சந்தித்த நான் கடவுள் படத்தின் சூட்டிங் கடந்த 2ஆண்டுகளாக நடந்து வந்தது படத்தின் ஹீரோ ஆர்யாவும் வேறு படங்களில் ஒப்பந்தமாகாமல் நான் கடவுளுக்காக தாடியுடன் திரிந்தார்.தற்போது படத்தில் ஆர்யா தொடர்பாக காட்சிகளின் சூட்டிங் முடிவடைந்த நிலையில் அவர் தாடியை முகச்சவரம் செய்துள்ளார். விரைவில் த்ரிஷாவுடன் ஜோடி போடும் சர்வம் படத்தின் சூட்டிங்கில் ஆர்யா பங்கேற்கவுள்ளார்.

# தமிழ் பேசும் ஷாருக்கான்



இந்திப் படங்களுக்கு தமிழ் நாட்டில் எப்போதும் நல்ல வரவேற்பு உண்டு. சென்னை, மதுரை, கோயம்புத் தூர் போன்ற பெருநகரங்களில் நேரடி இந்திப் படங்கள் வசூலை பெற்று வருகின்றன. சமீபகாலமாக உலக அளவில் இந்திப் படங்களுக்கு மவுசு அதிகரித்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக இந்திப் படங்கள் தமிழில் மொழி மாற்றம் செய்யப்படுகின்றன. ஹிருத்திக் ரோஷன் சுப்பர் ஹீரோவாக நடித்த 'க்ரீஷ்' தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு நல்ல வரவேற்பை பெற்றது.

ஆனால் அதற்கு பிறகும் மொழிமாற்றம் செய்யப்பட்ட 'ஜோதா அக்பர்'. 'ரேஸ்' ஆகிய எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இருந்தும் மொழிமாற்றும் வேலைகள் நிற்கவில்லை.

அமிதாப்பச்சன், ஷாருக்கான், ஜுஹிசாவ்லா நடித்த "பூத்நாத்" திரைப்படம் திரைக்கு வருகிறது. இது பெரும் ஸ்டார்கள் நடித்திருக்கும் என்பதால் 'பூத்நாத்' தை தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிடவுள்ளனர். அமிதாப்,ஷாருக்கிற்கு தமிழ் வசனம் எழுதும் வேலைகள் தற்போது ஜரூராக நடந்து வருகிறதாம்.

# கேன்ஸில் அஜித் படம்



தமிழ் சினிமாவில் அழுத்தமான தடம் பதித்த அஜித் படம் பில்லா.

1980இல் ரஜனி நடிப்பில் வெளியான பில்லாவின் ரீமேக்கான இது அதன் ஸ்டைலில் மேக்கிங் கிற்காக பாராட்டப்பட்டது.

உள்ளூர் ரசிககர்களின் பாராட்டைப் பெற்று புதிய படைப்பாக உலக ரசிகர்களின் பார்வைக்கு செல்கிறது. பிரான்ஸில் வருடம் தோறும் நடைபெறும் கேன்ஸ் திரைப்படவிழாவில் திரையிடப்பட தேர்வாகியுள்ளது.

இதற்கு முன் வெயில், மொழி, பருத்தி வீரன் படங்களுக்கு இவ்வாய்ப்பு கிடைத்தது. அஜித் படமொன்று கேன்ஸ் திரைப் படவிழாவில் திரையிடப்படுவது இதுவே முதன்முறையாகும். இம் மாதம் 18ம் திகதி கேன்ஸில் பில்லா திரையிடப்படவுள்ளது. கேன்ஸில் ஒருபடம் திரையிடப்படுவது மிகப் பெரிய கௌரவம். இதனை நேரில் பார்க்க அப் படத்தின் இயக்குநர் விஸ்ணுவர்த்தன் கேன்ஸ் செல்ல உள்ளார் .

அஜித் கேன்ஸ் பட விழாவில் கலந்து கொள்வாரா? மாட்டாரா? என்பது இன்னும் முடிவாகவில்லை.

# "அன்றொரு நாள்"

## திடுக்கிடும் மர்மங்களுடன் பயங்கர திகில் படம்


ஏழை குடும்பத்தைச் சேர்ந்த ஒரு கல்லூரி மாணவியை திருமணம் செய்வதாக ஆசை காட்டி, ஒரு உயர் பொலிஸ் அதிகாரியின் மகன் கெடுத்து விடுகிறான். தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி அந்த மாணவி கெஞ்சுகிறாள். அவளைத் திருமணம் செய்துகொள்ள அவன் மறுத்துவிடுகிறான்.

அவன் மீது அவள் கோர்ட்டில் வழக்கு தொடர்கிறாள். வழக்கை வாபஸ் பெறும்படி அவள் மிரட்டுகிறாள். மிரட்டலுக்கு அஞ்சாத அந்த மாணவியை,பொலிஸ் அதிகாரியே கொலை செய்து விடுகிறார். வயிற்றில் குழந்தையுடன் இறந்துபோன அந்தப் பெண்ணின் ஆவி, தன்னை ஏமாற்றியவர்களையும், கொலை செய்தவனையும் பழிவாங்கத் துடிக்கிறது.

ஆவியின் ஆசை நிறைவேறியதா, இல்லையா? என்பதை கருவாக வைத்து, "அன்றொரு நாள்" என்ற பெயரில் ஒரு புதிய படம் தயாராகிறது. ஓய் கிரியேஷன்ஸ் என்ற புதிய பட நிறுவனம் இந்தப் படத்தை தயாரிக்கிறது. திடுக்கிடும் மர்மங்களுடன் கூடிய பயங்கர திகில் படம் இது.

படத்தின் கதாநாயகனாக புதுமுகம் ஜெயகிருஷ்ணன் அறிமுகம் ஆகிறார். புதுமுகங்கள் பிந்தியா, மைதிலி ஆகிய இருவரும் கதாநாயகிகளாக அறிமுகம் ஆகிறார்கள். முக்கிய பாத்திரத்தில் "கெட்டப்" ராஜேந்திரன் நடிக்கிறார். இவர்களுடன் செந்தில், பொன்னம்பலம்,மயில்சாமி,நெல்லை சிவா, கிரேன் மனோகர்,டைரக்டர் பாரதி கண்ணன் ஆகியோரும் பங்கு பெறுகிறார்கள். கெட் அப் ராஜேந்திரன் தயாரிக்கிறார். படப்பிடிப்பை ஆலப்புழா, எர்ணாகுளம்,சங்கரன் கோவில், திருச்சி ஆகிய இடங்களில் நடத்தி முடிக்க திட்டமிட்டு இருக்கிறார்கள்.

# சினி விமர்சனம்






# குருவி

விஜய்யின் அப்பா மணிவண்ணன் ஆந்திரா மாநிலத்தில் ஒரு கல் குவாரியில் கல் உடைக்கும் போது அதில் வைரம் இருப்பதை கண்டுபிடிக்கிறார். உடனடியாக அதுபற்றி அரசுக்கு சொல்ல முயற்சிக்கிறார். அதை வில்லன்களான சுமனும், ஆஷிஷ் வித்யார்த்தியும் சேர்ந்து தடுத்து நிறுத்தத்துடன், மணிவண்ணன் உள்ளிட்டோரை கொத்தடிமையாக் குகிறார்கள். அதோடு வைரத்தை விற்று கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த மோசடியை விஜய் கண்டு பிடித்து, தந்தை மணிவண்ணனையும் அவரோடு அடிமைகளாக இருப்பவர்களையும் மீட்கிறார் என்பதே படத்தின் பரபரப்புக் கதை.

ஆரம்ப கட்ட கொத்தடிமை காட்சிகள் முடிந்ததும் மின்னல் வேகத்தில் ஒரு கார் வந்து நிற்கிறது. கார் வந்து நிற்கும் ஸ்டைலை பார்த்தும் விஜய்தான் வரப் போகிறார் என்று ரசிகர்கள் விசிலடித்து வரவேற்க காரில் இருந்து இறங்குகிறார் விவேக். வழக்கம்போல அவர் விஜய்யைப் பற்றி ஒரு பில்ட்அப் கொடுக்க விஜய் ஒரு தொட்டிக்குள் இருந்து தண்ணீர் பீய்ச்சியடிக்க குருவி போல பறந்து வருகிறார். தந்தை கொத்தடிமையாக இருப்பதை அறியாத விஜய் நண்பர்களுடன் ஜாலியாக பொழுதைப் போக்குகிறார் ஒரு டப்பா காரில் ரேஸில் பங்கேற்கிறார். எல்லோரும் விஜய்யின் டப்பா காரை பார்த்து கிண்டலடிக்கிறார்கள். அதையெல்லாம் பொறுத்துக் கொண்டு பந்தயதத்தில் பங்கேற்கிறார். கார் குருவியின் வேகத்தில் செல்கிறது. ஒவ்வொரு ஸ்பேர் பார்ட்ஸாக கழன்று விழுகிறது. கடைசியில் அறுந்து போன கேபிள்களை வாயில் கடித்து இழுத்து முதலிடத்தைப் பிடிக்கிறார். ஜெயித்த பின்னர் வழக்கம்போல ஒரு நச் பஞ்ச் வசனம் பேசுகிறார்.

ஒரு கட்டத்தில் குடும்பத்தின் கஷ்டத்தை உணர்ந்து, அப்பாவின் பணத்தை வாங்க விஜய் மலேசியா செல்கிறார். அங்கு சுமனின் தங்கை த்ரிஷாவை சந்திக்கிறார். விஜய் வில்லன்களை துரத்த, த்ரிஷா விஜய்யை துரத்த... என்று படம் நகர்கிறது. கடைசியில் விஜய் கொத்தடிமைகளை விஜய் எப்படி மீட்கிறார்? என்பது தான் மீதிக் கதை.

த்ரிஷா மெழுகு பொம்மையாக ஜொலிக்கிறார். இடுப்புக்கு எண்ணெய் தடவும் காட்சிகளில் கிளுகிளுப்பு என்ன விஜய்யை துரத்துவதில் மட்டுமே த்ரிஷாவின் நேரம் வீணாகிப் போகிறது. நடிப்புத் திறமையை வெளிப் படுத்த வாய்ப்பு கிடைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். மொழு மொழுன்னு பாட்டு ரசிக்க வைக்கிறது.

படத்தில் விஜய்யை வில்லன் கும்பல் மாறி மாறி சுடுவதும், ஒரு குண்டு கூட விஜய் மீது படாமல், மற்ற இடங்களை துளைப்பதும் அக்மார்க் சினிமாத்தனம். இதேபோல வில்லன்கள் துரத்தும்போது மொட்டை மாடியில் இருந்து மட்ரோ ரயில் பாலத்துக்கு தாவுவதும், ரயிலுக்கு இணையான வேகத்தில் ஓடி ரயிலை பிடிப்பதும் நம்பும் படியாக இல்லை.விஜய் ரசிகர்கள் மட்டும்தான் இதுபோன்ற காட்சிகளை ரசிப்பார்கள்.இடைவேளை வரை படத்துக்கு பக்கபலமாக இருப்பது விவேக்கின் காமெடி காட்சிகள் தான். இடைவேளைக்குப் பிறகு விவேக் எங்கே போகிறார் என்றே தெரியவில்லை.

படத்தின் சில காட்சிகளை பார்க்கும்போது கில்லி படத்தை இயக்கிய தரணியா இந்தப் படத்தை இயக்கினார் என்றுகேட்கத் தோன்றுகிறது. பாடல்கள் ரசிக்க வைக்கின்றன.

குருவி – விஜய் ரசிகர்களுக்கு அதிரடி; மற்றவர்களுக்கு அடி

# இயக்கம்

பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பதற்காக அதிரடி அவதாரம் எடுக்கும் கலெக்டரைப்பற்றிய கதை மணிரத்தினம் ஸ்டைலில் இருட்டுக் குள்ளேயே கதையை நகர்த்தியிருக்கிறார்கள். அந்த மாவட்ட கலெக்டெர் பெயர் பொய் சொல்லா மெய்யன் அவருக்கு முன்பு அந்த மாவட்ட கலெக்டர் சீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் மர்மமான முறையில் இறந்துவிடுகிறார்கள் இதற்குக் காரணம் என்ன என்று அலசி ஆராயும் கலெக்டர் மெய்யன். தான் படித்த பள்ளியின் நிர்வாகி தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று அறிந்து அதிர்ச்சி அடைந்தான்.



## என்னவொரு வில்லத்தனம்

மர்மமாக நகரும் கதையில் சூடு பிடிக்கிறது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுகிறார் கலெக்டர் இதில் தனது காலையும் காதலையும் பறி கொடுக்கிறார் இதனால் ஆவேசம் மேலும் அதிகரிக்கிறது. அடர்ந்த காட்டுப் பகுதியில் வில்லனுக்கு எதிராக அவரால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று சேர்கிறார்கள். மெகா திட்டம் போடும் இவர்கள் வெற்றிபெற்றார்களா? இல்லை தோல்வியை தழுவுகிறார்களா என்பதுதான் க்ளைமாக்ஸ். கலெக்டர்கள் அடுத்தடுத்து மர்மமாக கொல்லப்படுவது திக் ரகம். நாயகனாக நடித்திருக்கும் ரிஷிகுமார் நடிப்பில் ஒரு முரட்டுத் தன்மை தெரிகிறது. தமிழ் சினிமாவுக்கு நல்லவொரு வில்லன் கிடைத்துவிட்டார் என்று தான் சொல்லவேண்டும்.

தனது திருமணத்திற்கு பொலிஸ் அதிகாரியை வரவழைத்து, அங்கேயே அவரை போட்டுத் தள்ளும் காட்சியில் என்னவொரு வில்லத்தனம்.

நாயகி ஸ்ருதிராஜை ஊறுகாய்க்கு கூட பயன்படுத்த வில்லை. சினிமாவுக்கு லாஜிக்கே கிடையாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல காட்சிகள் நகருகின்றன. எம்.எஸ். பாஸ்கர் காமெடி மட்டும் ரசிக்கலாம். நெல்லை சிவா, சிட்டிபாபுவின் டாய்லெட் காமெடிகள் படு மட்டம்.

ப்ரவீன் மணி இசையில் பாடல்கள் பரவாயில்லை ரகம் மணிரத்னம் படம் ஸ்டைலில் ஒளிப்பதிவு செய்த லியோவை கைதட்டி பாராட்டலாம்.

# உடம்பை இரும்பாக்கிய சூர்யா



ஆர்னல்டின் அடுத்த வாரிசாக காட்சியளிக்கிறார் சூர்யா. "வாரணமாயிரம்" படத்தில் உடம்பை இரும்பாக்கியிருக்கிறார்.

கௌதம் மேனன் இயக்கத்தில் சூர்யா கதாநாயகனாக நடிக்கும் படம் "வாரணமாயிரம்" இப்படத்தில் 17 முதல் 65 வயது வரையிலான தோற்றத்தில் நடிக்கிறார் சூர்யா.

கதைப்படி இளமைக் காலத்தில் பாடிபில்டராக வருகிறார் சூர்யா. கதாபாத்திரத்துடன் தோற்றம் ஒன்றியிருக்க வேண்டும் என்பதற்காக கடந்த 8 மாதங்களாக கடுமையாக உடற்பயிற்சியை மேற்கொண்ட சூர்யா. நிஜ பாடிபில்டராகவே மாறி காட்டி இயக்குநரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

முறையான பயிற்சியாளரை நியமித்து அவரது ஆலோசனைகளைக் கேட்டு உடற்பயிற்சி செய்த சூர்யாவிற்கு இப்போது கைமேல் பலன் கிடைத்துள்ளது.சட்டையை கழற்றி தம்புள்ஸ் எடுக்க ஆரம்பித்தால் சூர்யாவின் உடம்பில் மூங்கில் கணுக்கள் மாதிரித் தோன்றுகின்றன.

நிஜம் தானா இது? என சூர்யாவின் தோள் பட்டைகளை தொட்டுப் பார்த்தால் இரும்பில் கைவைத்தது போல இறுக்கமாக இருக்கிறது. இதுவரை எந்த தமிழ் நடிகரும் இதுபோன்றதொரு உடல் வாகில் மாறி நடித்ததில்லை எனப் பரவசம் கொள்கின்றனர் "வாரணமாயிரம்" படக்குழுவினர்.

# "எங்க ராசி நல்ல ராசி"



மனுநீதி, சவுண்ட் பார்ட்டி, காசு இருக்கணும் ஆகிய படங்களை தயாரித்த ஜி.ஆர்.கோல்டு பிலிம்ஸ், அடுத்து ஒரு புதிய படம் தயாரிக்கிறது. இந்தப் படத்துக்கு, "எங்க ராசி நல்ல ராசி" என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது.

காட்சிக்கு காட்சி சிரிக்க வைக்கும் நகைச்சுவை படம் இது. இதில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார். இன்னொரு கதாநாயகன், விஷ்வா, இவர் "காசு இருக்கணும்" படத்தில் கதாநாயகனாக நடித்தவர்.

இப்போது, "ஆண்டாள் அழகர்" என்ற படத்திலும் கதா நாயகனாக நடித்து வருகிறார். இதையடுத்து விஷ்வா நடிக்கும் படம், "எங்க ராசி நல்ல ராசி"

கதாநாயகியாக புதுமுகம் சாருலதா நடிக்கிறார். மற்றும் எஸ்.வி.சேகர், ராதாரவி ஆகியோரும் நடிக்கிறார்கள். முக்கிய கதாபாத்திரத்தில் , தயாரிப்பாளர் ஜி.ஆர். நடிக்கிறார். தயான் ஓஷோ ஒளிப்பதிவு செய்ய, தேவா இசையமைக்க, பிறைசூடன், கருணாநிதி பொன்னியின் செல்வன் ஆகியோர் பாடல்களை எழுதுகிறார்கள்.

திரைக்கதை,வசனம்,டைரக்ஷன் பொறுப்புகளை ரவிராஜா கவனிக்கிறார்கள். ஆர்.பி.பூரணி தயாரிக்க, இணை தயாரிப்பு ஆர்.சிவகுமார், ஆர்.சுவாமி குமார்.

படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி, தொடர்ந்து நடைபெறுகிறது.

பாடல் காட்சிகளை தர்மபுரி, ஊட்டி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் படமாக்க திட்டமிட்டுள்ளனர்.

# எண் சோதிடம்



### எண் -9 (செவ்வாய்)

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இவர்களில் அறிவாளிகள் மற்றவர் பேசும் போது குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களை எதிர்த்தாலும் பொறுமையுடன் எதிரியை ஆராய்ந்து கொண்டிருப்பர். மனதிற்குள் ''இவரை எப்படி வீழ்த்துவது'' எனத் திட்டமிட்டபடி இருப்பர். எவ்வளவு கேட்டாலும் மனதிலுள்ளதை வெளியில் காட்டிக் கொள்ளமாட்டார்கள். சாமர்த்தியம் தான் காணப்படுமேயன்றி துடுக்குத்தனமிராது. ஆனால் இவர்களில் சாமான்யரோவெனில் சீக்கிரமே அபிப்பிராயங்களை வெளியிட்டுவிடுவார்கள். கோபதாபங்களை வெளிக்குக் காட்டிக் கொண்டுவிடுவார்கள். கூர்மையான அறிவுடைய இவர்கள் தீவிரமான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதுண்டு. இவர்களில் மிகச் சிறந்த தத்துவஞானிகளும், அறிஞர்களும் சகஜமாகக் காணப்படுவர். பிறந்த திகதி எண்களில் ஒரு எண் 9 ஆக இருந்தால் அது மற்ற எண்ணின் தன்மைகளைத் தீவிரப்படுத்தும். இரண்டு எண்களும் 9 ஆகவே இருந்தால் பெயர் குறிக்கும் குணங்களைத் தீவிரமாக்கும். இவர்களுக்குத் தளராத உறுதியும், போராடும் சக்தியும் இருப்பதுடன் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைக் கண்டு பிடிப்பதிலும் ஆர்வமிருக்கும். இவர்களுக்கு இரசாயனம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களில் மிகுந்த ஆர்வமும் தேர்ச்சியும் உண்டாகும். தெய்வீகமான ரகஸ்யங்களையும் அறிந்து அதனால் உலகினருக்கு வழிகாட்டுபவர்களும் இவர்களே. இவர்களிடம் சில அபூர்வ சக்திகள் காணப்படும். இப்படிப்பட்டவர்கள் புகழை விரும்பாமல் ஜனங்களிடமிருந்து ஒதுங்கியே வாழ்வார்கள்.

இனி இவ்வாதிக்கரின் வாழ்க்கையைக் கவனிப்போம். இவர்களது வாழ்க்கை முன் கூறியபடி ஒரு ஓயாத போராட்டமே. பல ஆபத்துக்கள் வந்து விலகும். நற்காரியங்கள் செய்யும் போதெல்லாம் அவை நல்ல பலன்களையே கொடுத்து ஊக்கமளிக்கும். பரேபகாரமான செயல்களில் ஈடுபடுவர். அனுபவசாலியெனப் புகழப்படுவர். வஞ்சகர்களாலும், ஏமாற்றுகிறவர்களாலேயும் இவர்கள் சூழப்படுகின்றனர்.

இந்த எண்ணைப் பற்றிக் கூறும்போது பழைய நூல்கள் ''அறிவெனும் தீபம் தாங்கி, காலின் கீழ் இருக்கும் பாம்பைக் கவனியாமல் ரத்தம் கறைபடிந்த பாதையில் தனியே போகும் அனுபவசாலி'' எனக் குறிக்கின்றன. இவர்கள் சூழ்ச்சி நிறைந்தோருடன் வாழ நேரும். இவர்களுக்குப் புதுப்புது யுக்திகள் தோன்றும். நிதானத்தை இழக்காதிருந்தால் இவர்களே வெற்றியடைவர். இவர்களில் அநேகருக்கு ஆரம்ப வாழ்க்கை கஷ்டங்கள் நிறைந்ததாக இருக்கும். தோல்வியைக் கண்டு ஒருநாளும் கலங்கமாட்டார்கள். எவ்வளவு கஷ்டம் வரினும் தாங்கிக்கொள்ளும் சக்தி உண்டு.

எண்ணின் ஆதிக்கம் குறைவானால் பலவீனராயும், மற்றவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவராயும் ஆகிவிடுவார். ஆதிக்கம் நன்கு இருந்தால் எப்பொழுதும் மனதில் உற்சாகமிருக்கும். சினிமாக் கொட்டகை முதலிய இடங்களில் எல்லோரையும் தள்ளிக் கொண்டு போய் முண்டியடித்து டிக்கெற் வாங்குகிறவர்கள் இவர்களே. சிரித்த முகத்துடனேயே காணப்படுவர். பிறருக்கு ஊக்கம் கொள்ளும்படி தைரியம் சொல்லுவார்கள், பணம் சம்பாதிப்பது இவ்வளவு சாமர்த்தியமுடையவர்களுக்கு ஒரு பிரமாத காரியமா! மனதுக்குப் பிடித்த வழிகளில் தாரளமாகச் செலவும் செய்வார்கள். நல்லோர்களிடம் மரியாதையுடன் நடந்து அவர்களது நன்மதிப்புக்குப் பாத்திரராக நடந்து கொள்வார்கள்.

மனமொத்த நண்பர்களுக்காக எந்த உதவியையும் செய்வார்கள். மனதுக்குப் பிடித்த வகைகளிலெல்லாம் யோசனையின்றிப் பொருளை செலவழிப்பார்கள். இவர்களில் தீயோரும் உண்டு. அவர்கள் தீராத ஸ்திரீ மோகம் உடையவர்களாயும், லாகிரி வஸ்துக்களை அருந்துபவர்களாயும் பிறரை இம்சிப்பதில் ஆனந்தம் அடைபவர்களாயும் காணப்படுவர். இவர்களுக்கு மிருக சுபாவங்களே மனதில் குடிகொண்டிருக்கும். தன் சுகமே பெரிதெனக் கருதுவர்.

ஆனாலும் இவர்களுக்கு ஒரு விசேஷ குணமுண்டு. அதாவது பெரியோர்கள் யாராவது இவரைக் கருணையுடன் நோக்கினால், உணர்ச்சி வசப்பட்டு இவர் உடனே அவர்களைப் பணிந்து நல்லவராகி விடுவார். இவர்களுக்கு அபூர்வமான கனவுகள் மூலம் திருவருள் வளரும். இவர்கள் மனதை யுத்தம் செய்த கடவுள் அம்சங்களை கவரும். இராமர், காளி, சுப்ரமணியர், அனுமார் முதலிய மூர்த்திகளையே உள்ளன்புடன் வழிபடுவர்.

*உடலமைப்பு:* இவர்கள் பொதுவாக நடுத்தரமான உயரமானவர்களாகவே காணப்படுவர். நுண்ணிய மனோசக்திகள் உடையவர்கள் மாத்திரம் உயரமாகக் காணப்படுவர். இவர்கள் திட சரீரிகளாக இருப்பர். சரீர உழைப்பையும் விரும்புவர். மற்றவர்களோ எனில் நடுத்தர உயரமானவரானாலும் குட்டையானவரைப் போலத் தோன்றுவர். இவர்கட்கு தேகம் கட்டுமஸ்தாக இருக்கும். புஜங்களும், மார்பும் சதை பற்றிக் காணப்படும். சதைகள் திரண்டு நிற்கும்.

இவர்களைப் பார்க்கும் போது தண்டபாணித் தெய்வம் நினைவுக்கு வரும்படி இவர்களது சரீரம் அமைந்திருக்கும். கொஞ்சம் தேகப் பயிற்சி செய்தால் கூட இவர்களது உடல் பயில்வான் போன்ற தோற்றத்தையடையும். பற்கள் நீண்டு பெரியனவாக இருக்கும். (இவர்களில் மிகுந்த பலிஷ்டர்களுக்கு மாத்திரமே மிகவும் சிறியதான பற்கள் அமையும். வாய் பெரிதாக இருக்கும்.

பேசும்போது கோணலாகத் தோன்றும்.

**பண்டிட் ஸேதுராமன்**

மூக்கு நீண்டு பெரியதாகக் காணப்படும். நிமிர்ந்து வேகமாக நடப்பார்கள். தொடைகள், மார்பு, வயிறு முதலிய பாகங்கள் வலிமை பெற்று அமைந்திருப்பதால் பார்வைக்கு இவர்கள் பராக்கிரம சாலிகளாகத் தோன்றுவர்.

*நோய்-உணவு:* இவர்களுக்குச் சரீரம் உஷ்ணமானதாகவே காணப்படும். மூலாதாரத்தில் உஷ்ணம் உடையவர்களாதலால் வயிற்றையே இவ்வுஷ்ணம் மிகவும் பாதிக்கும். இவர்களுக்கு இரத்தம் உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டதாகவே இருக்கும். ஒத்துக் கொள்ளாத உணவுகளை உட்கொண்டால் உடனே இவர்களது சரீரம் நோய்ப்படும். 9 எண்காரர் யாராவது ஆயுள் முழுவதும் உடம்பில் வடு ஏற்படாத படி வாழ்ந்தாரானால் அது ஒரு மிகப் பெரிய அதிசயமே. ஆபரே ஷன்கள் இவர் களுக்குப் பல தடவைகள் நடக்கும். இரத்தக் கட்டிகள், குடற்புண்கள், இரத்தம் விஷத் தன்மையடைதல், மூலரோகம் முதலியவைகளே இவர்களுக்கு வரும் நோய்கள். சுரமும் சிலருக்கு வருவதுண்டு. நெருப்புக் காயங்களும், விபத்துக்களும் கூட இவர்களுக்கு சகஜமாக ஏற்படுவதுண்டு. இந்த எண் ணிற்கு வலிமை அதிகமானால் வாழ்க்கை இரத்தக் காயத்தின் மூலம் தான் முடியும். உணவு விஷயத்தில் கீழ்க்கண்ட குறிப்புகளைப் பின்பற்றி வந்தால் நோயற்று வாழலாம். இவர்கள் சரீரத்திற்கு மிக்க நன்மை புரியக் கூடியதான வெங் காயத்தை அடிக்கடி உணவில் சேர்த்து வர வேண்டும். கூடுமானால் வெண் பூண்டும் சேர்த்துக் கொள்ளலாம். (ஸ்திரீகள் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்). கீரைகளில் புளிச்ச கீரை ஒன்று தான் இவர்களுக்கு நன்மை தரக் கூடியது. கூடுமானவரை மிளகாயைக் குறைக்க வேண்டும். அறவே நீக்குதல் மிக்க நன்மை விளைவிக்கும். சிறிதளவு மிளகு சேர்த்து வருதல் நலம்.

இஞ்சி அடிக்கடி சோத்துக் கொள்ளலாம். சேப்பங் கிழங்கு, கருணைக்கிழங்கு, வெண்டைக்காய் இவர்களுக்கு ஒத்த பண்டங்களாகும். மாமிச உணவுகள் குடல் நோய் ஏற்படச் செய்யும். வாசனை வீசக்கூடிய மசாலை சேர்த்த உணவுகளை அறவே விலக்க வேண்டும். சரீரம் நோய் வாய்ப்பட்டால் பழங்களையே ஆகாரமாகக் கொண்டு வந்தால் நோய் நீங்கி சீக்கிரம் குணம் பெறலாம். இவர்கள் எண்ணெய் ஸ்நானம் தவறாமல் செய்து வரவேண்டியது அவசியம். (தொடரும்)

## மெய்வல்லுநர் உத்தியோகத்தர் பதவியேற்றப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் உத்தியோகத்தர்களுக்கான பதவியேற்றப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகளை, யாழ். கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள ரில்கோ கொலிடேய்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் இல் யாழ். மெய்வல்லுநர் சங்க பொருளாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என மெய்வல்லுநர் சங்கம் அறிவித்துள்ளது. ஓ

## செயலமர்வு

(அல்வாய்)

**சித்திர பாடம்**

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6, தரம் 7 மாணவர்களுக்கு சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

✠✠✠

**கணித பாடம்**

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்டபட்ட பாடசாலைகளில் தரம் 7 இல் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித பாட வாண்மை விருத்திச் செயலமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

✠✠✠

**மனைப்பொருளியல்**

தரம் 11 மாணவர்களுக்கு மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-19)

## உலக சுற்றாடல் தின விழிப்புணர்வுப் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் யூன் மாதம் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை ''*துப்புதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரகடனமாக பொது இடங்களில் துப்புவதைத் தவிர்ப்போம்*'' என்பதை இந்த ஆண்டுக்கான சுற்றாடல் தினப் பிரகடனமாக முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

பொது இடங்களில் துப்புவது அடுத்த மனிதனுக்கு அருவருப்பையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்துவதுடன் சூழலின் அழகைக் கெடுப்பது மட்டுமன்றி பலவித நோய்கள் ஒருவரில் இருந்து பலருக்குப் பரவுவதற்கும் காரணமாக அமைகின்றது.

பாமரர் மட்டுமல்ல படித்தவர்கள் பலரும் கூட பொது இடங்களில் துப்புவதைத் தவறான செயல் என்பதை அறியாதவர்களாகவும் சிந்திக் காதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

பொது இடங்களில் துப்புவது தவறான செயல் என்ற விழிப்புணர்வை அனைவர் மனங்களிலும் ஏற்படுத்துவதே தமக்குக் கிடைக்கக் கூடிய ஆரம்ப வெற்றி என்றும் பொது இடங்களில் துப்புதலைத் தவிர்ப்பது பூரண வெற்றியாகும் என்றும் நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. ஓ

## நியமனக் கடிதம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தாதியர் பயிற்சி நெறிக்கு தெரிவானவர்களுக்கான நியமனக் கடிதம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு தாதியர் பயிற்சி பாடசாலை, யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும்.

எனவே இப்பயிற்சி நெறிக்கு தெரிவானவர்கள் தவறாது வந்து இக் கடிதத்தை பெற்றுக் கொள் ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். ஓ

## அறிமுகவிழாவும் விளையாட்டு விழாவும்

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையின் அனுசரணையுடன், ''இலங்கை வங்கிக் கிராமம்–சோளங்கன்'' அறிமுகவிழாவும் விளையாட்டு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கரணவாய் சோளங்கன் சனசமூக நிலையத்தில் கிராம உத்தியோகத்தர் சி.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மற்றும் இலங்கை வங்கி நெல்லியடி முகாமையாளர் வ.தில்லைநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசில்களை திருமதி நளினி சிவரத்தினம் வழங்கிக் கௌரவிப்பார். ஓ

## மாதிரி கிராமம் தெரிவு

நல்லூர் பிரதேச செயலக சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாதிரி கிராமம் தெரிவு செய்யும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் தெரிவித்துள்ளார். ஓ






கோப்பாய் சமுர்த்தி மகா சங்கத்தின் சமூக அபிவிருத்தி மன்றின் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ் தலைமையுரையாற்றுவதை முதலாவது படத்திலும், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி சுகந்தி குணசீலன், பங்குத்தந்தை ஜெபநேசரட்ணம், பிரதேச செயலர், சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை பக்தகுணசீலன் (விளாக்)

முடமாவடி

## உரிமையாளர்: பூங்கனிச்சோலை



திருநெல்வேலி கிழக்கைப் (முடமாவடி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பக்தகுணசீலன் 9.5.2008-ல் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (M.L.T),வாலாம்பிகை(பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற அலன், செல்வநாயகி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மருமகனும் வசந்தரூபியின் அன்புக் கணவரும், அருண்புஜன் (யா/இந்துக் கல் லூரி,கணிதப்பிரிவு - 2007), ருத்திலா (யா/ இந்து மகளிர் கல்லூரி,கலைப்பிரிவு-2009), சந்துஜன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை, தரம்-4), நிலாஜன்(யா/இந்துஆரம்பபாடசாலை, தரம்-02)ஆகியோரின் அன்புத் தந்தையும்,

உருத்திரசீலி (பிரான்ஸ்), நவநீதசீலன் (பிரான்ஸ்), புவிராஜசீலன் (பிரான்ஸ்), நவ நீதசீலி (பிரான்ஸ்),நற்குணசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலி (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

இராசதுரை (பிரான்ஸ்),கௌரி (பிரான்ஸ்), ஜெயமலர் (பிரான்ஸ்),விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), சுஜாத்தா (பிரான்ஸ்), சோதிநாதன் (பிரான்ஸ்), சிவநாதன் (பிரான்ஸ்), சாந்தரூபி (பிரான்ஸ்) ஆகியோரின்அன்புமைத்துனரும்,

லிகிந்தா (பிரான்ஸ்),பிகந்தா (பிரான்ஸ்), கவிமிராஜ் (பிரான்ஸ்),புவிராஜ் (பிரான்ஸ்), உதித்தா (பிரான்ஸ்), சாட்நசின் (பிரான்ஸ்), நிசாட் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாம னாரும், ரமணீசன் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்), கஜனீசன்(பிரான்ஸ்), ஜெகனீ சன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும்,

ஈசப்பிரியா (பிரான்ஸ்), மயூரிகா (பிரான்ஸ்), கௌசலன் (பிரான்ஸ்), பினாகா (பிரான்ஸ்), சுஜன் (பிரான்ஸ்), சுஜனி (பிரான்ஸ்), சிவதர் சன் (பிரான்ஸ்), நிரோஜன் (பிரான்ஸ்), மிரோ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரிய தந் தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (11.05.2008) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


'பூங்கனிச்சோலை'
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்**

(c-1100)

## கன்னத்தில் அறைந்த விவகாரம்

# ஹர்பஜனுக்கு ஒரு ஆண்டு தடை? சிறிசாந்த் விடுவிக்கப்படுகிறார்



ஐ.பி.எல் இருபது-20 போட்டியின்போது பஞ்சாப் வீரர் சிறிசாந்தை மும்பை வீரர் ஹர்பஜன் சிங் கன்னத்தில் அறைந்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

போட்டி நடுவர் ஹர்பஜன் சிங்குக்கு தொடரில் எஞ்சிய போட்டிகளில் விளையாட தடை விதித்தார். இதனால் அவருக்கு ரூ.3கோடி இழப்பு ஏற்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக கிரிக்கெற் சபை சார்பில் அகமதாபாத்தை சேர்ந்த வழக் கறிஞர் நானாவதி விசாரணை நடத்தினார். அவர் ஹர் பஜன் சிங்கிடமும் சிறிசாந் திடமும் நேற்று முந்தினம் விசாரணை செய்தார். விசாரணை யின் போது ஹர்பஜன்சிங் தவறை ஒப்புக் கொண்டார்.

நானாவதி தனது விசாரணை அறிக்கையை நாளை இந்திய கிரிக்கெற் சபைத் தலைவர் சரத்பவாரிடம் சமர்ப்பிப்பார். இந்த அறிக்கையின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். கன்னத்தில் அறைந்தது மிகப் பெரிய தவறு என்பதால் ஹர்பஜன் சிங்கிற்கு ஒரு ஆண்டுக்கு சர்வதேச கிரிக்கெற்றில் விளையாடத் தடை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.டெண்டுல்கர் தலையிட்டால் ஹர்பஜன் சிங் மீதான தண்டனை குறையும். அவர் தலையிட வாய்ப்பு இருக்கிறது.

இந்த விவகாரத்தில் சிறிசாந்த் குற்றமற்றவர் என்று கூறி அவரை தண்டணையில் இருந்து விடுவிக்க வாய்ப்பு உள்ளதாக மேலும் கூறப்படுகிறது. (5)

## கங்குலி, டிராவிட் அணிகளுக்கு அபராதம்

(புதுடில்லி)

குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்து வீசி முடிக்காத கங்குலி, டிராவிட் அணிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) சார்பில் 'இருபது-20' தொடர் நடக்கிறது. கடந்த வியாழக்கிழமை கொல்கத்தாவில் நடந்த லீக் போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, டிராவிட்டின் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தியது.

இப்போட்டி மழை காரணமாக 16 ஓவர்கள் கொண்டதாக நடத்தப்பட்டது. இரு அணிகளுமே குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீச தவறின. இது ஐ.பி.எல் விதிமுறைகளின் படி தவறு என்பதால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறிப் பிட்ட நேரத்தையும் கடந்து இரண்டு ஓவர்கள் தாமதமாக வீசிய டிராவிட் அணிக்கு ரூ.40 ஆயிரம் மற்றும் ஒரு ஓவர் தாமதமாக பந்து வீசிய கங்குலி அணிக்கு ரூ.20 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுவதாக போட்டி நடுவர் பரூக் இன்ஜினியர் அறிவித்துள்ளார். (5)

# ராஜஸ்தான் றோயல்ஸ் அபார வெற்றி



யூசுப் பதான்

(ஜெய்ப்பூர்)

யூசுப் பதான், சிமித்தின் அபார ஆட்டத்தால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரில் 6 ஆவது வெற்றியை பெற்ற ராஜஸ்தான் அணி, புள்ளிகள் அடிப்படையில் மீண்டும் முதலாம் இடத்திற்கு முன்னேறியது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 30 ஆவது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் லக்ஷ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வோர்ன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி கில்கிறிஸ்டின் அதிரடி அரை சதம் கைகொடுக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களை எடுத்தது. இதில் கில்கிறிஸ்ட் 49 பந்துகளில் (9 பவுண்டரிகள் ஒரு சிக்சர் உட்பட) 61 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் ஆட்டமிழக்காமல் 11 பந்துகளில் (3 பவுண்டரி ஒரு சிக்சர் உட்பட) 23 ஓட்டங்களையும் மற்றும் கிப்ஸ் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித்தலைவர் ஷேன் வோர்ன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 141 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி; சிமித் , யூசுப் பதானின் ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டமாக 109 ஓட்டங்களைப் பகிர்ந்ததன் உதவியுடன் 16 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் யூசுப் பதான் 37 பந்துகளில் (9 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் உட்பட) 68 ஓட்டங்களையும் சிமித் 40 ஓட்டங்களையும் கைப் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் எடுத்தனர். இப்போட்டியின் நாயகனாக யூசுப் பதான் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் ஆடிய 8 ஆவது ஆட்டத்தில் பெறும் 6 ஆவது வெற்றி இதுவாகும்.

இதேவேளை இத்தோல்வியுடன் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 8 ஆவது ஆட்டத்தில் சந்திக்கும் 6 ஆவது தோல்வி இதுவாகும். (5)


## யாழ்.மாணவர்களுக்கு சிங்கப்பூரிலும் மேலைத்தேய நாடுகளிலும் உயர்கல்வி வாய்ப்புக்கள்

பிரபல கல்வி நிறுவனமான BRITISH BUSINESS SCHOOL இன் சேவைகளில் ஒன்றாக
யாழ். மாணவர்களுக்கான இலவச கல்வி வழிகாட்டல் சேவை

சிங்கப்பூர் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பிரபல கலாசாலைகளில்

* Diploma (8 Months) = Degree Year 1
* Advanced Diploma (8 Months) = Degree Year 2
* Final Year Degree (8 Months)

என்ற கட்டங்களில் பின்வரும் பாடநெறிகளுக்கான அனுமதி வாய்ப்புக்கள், ஆண், பெண் இருசாராருக்கும் உள்ளன.

* Computing, Information Technology, Networking
* Computer Engineering
* Electrical & Electronic Engineering
* Business Management
* Hotel Management
* Accountancy

பெண்களுக்கான விசேட பாடநெறிகள்

* Diploma in Pre-School Education (8 Months)
  (Pre-School ஆசிரியராவதற்கான தொழில்கல்வி வாய்ப்பு)
* Diploma in Pre-School Education Leadership (8 Months)
  (Pre-School தலைமை ஆசிரியராவதற்கான தொழில்கல்வி வாய்ப்பு)

- 8 மாத (ஒரு கல்வியாண்டு) பூர்த்தியின் பின் சட்டரீதியாக **Work Permit** உடன் பகுதி நேரமாக கல்வியைத் தொடரும் வாய்ப்பு.
- 2ஆம், 3ஆம் கல்வியாண்டின் கல்வியை, நீங்கள் விரும்பின், **Australia, Canada, UK, USA** போன்ற நாடுகளிலும் தொடரலாம். இதற்குரிய விசா விண்ணப்பங்களை சிங்கப்பூரிலேயே செய்யும் வாய்ப்பு.
- சிங்கப்பூரில் முழுக் கல்வியை நிறைவுசெய்யும் பட்சத்தில் **Professional Work Permit** பெற்றபின் நிரந்தர வதிவிட விசாவிற்காக விண்ணப்பிக்கும் வாய்ப்பு.

**பாடத்தகைமைகள்**

- அனைத்து பாடநெறிகளுக்கும் **G.C.E. (O/L)** ஆங்கிலம், கணிதம் உட்பட 5 பாடங்களுடன் **A/L** இல் 2 பாடங்கள்.
- **G.C.E. (A/L)** இல்லாவிடின் **BBS** இன் **Business Diploma** கல்வித்தர சான்றிதழ்.
- ஆங்கில அறிவை உறுதிசெய்யும் **BBS** இன் **Diploma in English** அல்லது வேறு சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படும். ஆங்கில சான்றிதழ்கள் அற்றவர்களுக்கு உயர்கல்வியை தொடர்வதற்கான இலக்கண, எழுத்தறிவு வகுப்புக்கள் குறுகிய காலத்தில் தனிப்பட்ட அல்லது சிறுகுழு ரீதியில் கற்பிக்கப்பட்டு, **BBS Diploma in English** சான்றிதழ் விரைவில் பெறும் வாய்ப்பு.
- பதிவுக்கட்டணம், காப்புறுதிக் கட்டணம் தவிர வேறெந்த கட்டணத்தையும் மாணவர்கள் இலங்கையில் செலுத்த வேண்டிய அவசியமில்லை. மாணவர்கள் சிங்கப்பூர் பயணமாகும் போது **Student Visa** உடன் **Bank Draft** கொண்டு செல்லல் வேண்டும்.

மாணவர்களுக்கான சிங்கப்பூரில் கல்வி அனுமதி, சிங்கப்பூர் **Student** விசா, சிங்கப்பூரில் தங்குமிடம் ஆகியவற்றை **British Business School** ஆனது, சிங்கப்பூரிலுள்ள கலாசாலை மூலமாக ஒழுங்கு செய்யப்படும்.

**BBS** இன் இச்சேவைக்கு எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது.


சிங்கப்பூர் பயணத்திற்காகத் தவிர, நீங்கள் கொழும்பு செல்லவேண்டிய அவசியமில்லை

யாழ் மாணவர்களுக்காக BBS இன் இச்சேவையினால் உயர்கல்வியை வெளிநாடொன்றில் தொடரும் வாய்ப்பினைப் பெற்று, உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்று, சிங்கப்பூரில் கல்வியை கற்க ஆரம்பித்தவுடன், உங்கள் தொப்புள்கொடி பந்தங்களை மறக்காமல் BBS இன் நிர்வாகத்தினரின் அனுசரணையுடனும் நன்கொடையாளர்களின் உதவியுடனும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறார்கள், மற்றும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறார்களுக்காகவும் நடாத்தப்படும் முற்றிலும் இலவசமான Gods Own Children எனும் விசேட பாடசாலைகளுக்கு பால், சத்துணவு வழங்கும் திட்டத்திற்கும், GOC பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கும், தங்களால் முடிந்த நல்லுதவியினை உங்கள் பெற்றோர், உறவினர் மூலம் வழங்கி, வறுமையில் வாடும் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும்படி வேண்டுகின்றோம்.

விபரங்களுக்கு நேரில் வந்து Director / Principal or Vice Principal or Senior Manager ஐ சந்திக்கவும்

**BRITISH BUSINESS SCHOOL**
140, Temple Road, Jaffna. Tel: 021- 222 - 5796, 077- 4083656

# அரசு எதிர்நோக்கும் நெருக்கடிகளை



கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் அனைத்துலக மட்டத்தில் அதிக விமர்சனங்களுக்கு உள்ளாகிவரும் தனது ஜனநாயக செயற்பாடுகளை தூக்கி நிறுத்தவும், தனது அரசியல் பலத்தை பரீட்சித்து பார்க்கவும் அரசாங்கம் முயன்று வருவதும், தமிழ் மக்களின் இணைந்த தாயகக் கோட்பாட்டை சிதைக்க முற்பட்டு வருவதும் வெள்ளிடைமலை.

எனினும், நான்காம் கட்ட ஈழப் போர் தோற்றுவித்துள்ள புதிய போரியல் பரிமாணங்கள் அதனை எதிர்கொள்ள அரசிற்கு தேவைப்படும் படை வளம் மற்றும் நிதிவளம் என்பன அரசின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளதுடன் போரினால் ஏற்பட்டு வரும் நேரடியற்ற பாதிப்புக்களும் அனைத்துலகத்தில் ஏற்பட்டு வரும் பொருளாதார தளம்பல்களும் அரசிற்கு பாரிய நிதி நெருக்கடியை தோற்றுவித்து வருகின்றது.

இந்த நிதி நெருக்கடிகளை சமாளிப்பதற்காக இந்தியா, ஈரான் போன்ற நாடுகளிடம் இருந்து பெருமளவான நிதி உதவிகளையும் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடம் இருந்து படைத்துறை உதவிகளை யும் அரசு பெற்றுவந்த போதும் அவை தற்போதைய பொருளாதார இராணுவ நெருக்கடிகளை எதிர்கொள்ள போதுமானவை அல்ல.

எனவே கிழக்கின் அபிவிருத்தி என்ற போர்வையில் 1840 மில்லியன் டொலர்களை (197, 219 ரூபாய்கள்) திரட்டும் முயற்சிகளை அரசு முடுக்கிவிட்டுள்ளது. 1995 ஆம்ஆண்டு யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் அன்றைய அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க யாழ். குடாநாட்டின் அபிவிருத்திக்கு என உலக நாடுகளிடம் பெரும் தொகை நிதி உதவிகளை கோரியிருந்தார். எனினும் கடந்த 13 வருடங்களில் யாழ். குடாநாடு கண்ட அபிவிருத்தி என்ன? தற்போது அங்குள்ள மக்கள் படும் துன்பங்கள் என்ன என்பதை உலகறியும்.

தற்போது கிழக்கின் அபிவிருத்தித் திட்டத்திற்கு என பெரும் தொகை நிதி உதவிகளை பெறும் பொருட்டு முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்கும் திட்டத்தை அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் கவர்ச்சிகரமான பல சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. 20 ஆண்டுகால வரிச்சலுகை விடுமுறை சிறப்பு சலுகை களின் அடிப்படையில் நிலம் வழங்குதல் உட்பட பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிதி திரட்டலுக்கு அனுகூலமான தோற்றப்பாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் இராணுவம் சிறப்பு அதிரடிப்படை, காவல்துறை, ஊர்காவல் படை என ஏறத்தாழ 30 ஆயிரம் படையினரின் பாதுகாப்புடன் கிழக்கு மாகாணசபைத் தேர்தலும் நடத்தப்படவுள்ளது.

எனினும் இந்த தேர்தல் வெற்றிகளுக்காக அரசாங்கம் மேற்கொண்ட படைத்துறை நகர்வுகள் எதுவும் குறிப்பிடத்தக்க பலனை கொடுக்கவில்லை. மேலும் கடந்த மாத இறுதிப்பகுதியில் நடைபெற்ற முகமாலை சமர், மணலாற்றில் நடைபெற்ற வான் தாக்குதல் படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ள தகவல்கள் என்பன போர் தொடர்பாக தென்னிலங்கை மக்களின் மனங்களில் உருவாக்கப்பட்ட விம்பங்களை முற்றாக தகர்த்துள்ளன.

அதாவது முகமாலையில் நடைபெற்ற 3 மணிநேர உக்கிர சமரில் இலங்கை இராணுவத்தின் ஒரு பற்றலியன் படையினர் களத்தில் இருந்தும் அகற்றப்பட்டுள்ளனர். 6 கவச வாகனங்களையும் படையினர் இந்த சமரில் இழந்திருந்தனர்.

இந்த மோதல் காரசாரமான விவாதங்களை தென்னிலங்கையில் ஏற்படுத்தி வருகையில் அரசாங்கம் பல கட்டுப்பாடுகளை ஊடகங்கள் மீதும், படை அதிகாரிகள் மீதும் கொண்டு வந்துள்ளது. உதாரணமாக காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்லும் நோயாளர் அம்புலன்ஸ்களின் சைரன் ஒலிகளை நிறுத்துதல், காயமடைந்த படையினரை பார்வையிடுவதற்கான ஊடகவியலாளர்கள் மீதான தடை ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் படை அதிகாரிகளை தண்டித்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

# கிழக்கு மாகாண தேர்தல் தணிக்குமா?

இராணுவத்திற்கு ஏற்பட்ட இந்த நெருக்கடிகளை போல வான்படையும் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளது. மணலாறு களமுனையில் வான்புலிகள் நடத்திய தாக்குதல் வான்படையினரின் விமான எதிர்ப்பு தாக்கு திறன் தொடர்பான நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தியுள்ளது.

இவை தவிர விடுதலைப்புலிகள் மூன்று கப்பல் ஆயுதங்களை வடக்கு கிழக்கு கடற்பகுதியில் தரையிறக்கி உள்ளதாகவும் இரணைமடுவில் உள்ள விமான ஓடுபாதையின் நீளத்தை அதிகரித்து வருவதாகவும் படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ள தகவல்களும் அரசாங்கத்தின் பிரசாரங்களை தலைகீழாக்கியுள்ளன.

இந்தியா மற்றும் சில மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்புக்களுடன் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் தொடர்பான தகவல்களைபெற்றுவருவதாகவும் கடந்த ஆண்டு 10 கப்பல்களை அழித்துவிட்டதாகவும் விடுதலைப் புலிகளின் விநியோக வழிகளை முற்றாக அடைத்துவிட்டதாகவும், தெரிவித்து வந்த அரசாங்கத்தின் கூற்றுக்களை

> **விடுதலைப்புலிகள் மூன்று கப்பல் ஆயுதங்களை வடக்கு கிழக்கு கடற் பகுதியில் தரையிறக்கி உள்ளதாகவும், இரணைமடுவில் உள்ள விமான ஓடுபாதையின் நீளத்தை அதிகரித்து வருவதாகவும் படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ள தகவல்களும் அரசாங்கத்தின் பிரசாரங்கலை தலைகீழாக்கியுள்ளன.**

புலனாய்வுத்துறையின் தற்போதைய அறிக்கை முற்றாக முறியடித்துள்ளது.

மணலாற்று களமுனையில் விடுதலைப் புலிகள் மேற் கொண்டு வரும் தொடர்ச்சியான எறிகணை வீச்சுக்கள் முகமாலை சமரில் பயன்படுத்திய எறிகணைகள் மன்னார் களமுனையில் இழுபட்டு செல்லும் படை நடவடிக்கைகள் தொடர்பான மொத்த ஆய்வின் வெளிப்பாடாகவே புலனாய்வுத்துறையின் இந்த தகவல்கள் நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும், கடந்த மார்ச் மாதம் முல்லைத்தீவு க்கு கிழக்காக 150 கடல் மைல் தொலைவில் மியான்மர் மற்றும் பங்களாதேஷ் குடியேற்றவாசிகளை ஏற்றிச்சென்ற பெரிய றோலர் ஒன்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியது. இலங்கை மற்றும் இந்திய கடற்படை வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்தக் கப்பல் கைப்பற்றப்பட்ட நடவடிக்கையானது இரு தரப்பு கடற் கண்காணிப்புக்கள் தொடர்பான ஆளுமையை முற்றாகவே தகர்த்திருந்தது. அதாவது பர்மாவைச் சேர்ந்த இந்த றோலர் மியான்மரில் இருந்து 67பேருடன் கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி புறப்பட்டிருந்தது.

பின்னர் அது பங்களாதேஷ் நோக்கி சென்று அங்கிருந்து மேலும் 24 பேரை ஏற்றிக் கொண்டது. அங்கிருந்து மலேசியா மற்றும் தாய்லாந்து நோக்கிச் சென்ற இந்தக் கப்பலில் பெப்ரவரி 20 ஆம் திகதி இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

ஏறத்தாழ 10 நாட்களுக்கு மேலாக உணவு, குடிநீர் இன்றி சுக்களிக்க இங்க றோலரில் இருந்த 91 பேரில் 17பர்மியர்களும், 03 பங்களாதேஷ் நாட்டவரும் உயிரிழந்தனர். உதவி கோரி தத்தளித்த இந்தப் படகை மார்ச் மாதம் 2ஆம் திகதி அதிகாலை கண்டறிந்த இலங்கை மீனவர்கள் கொடுத்த தகவலை தொடர்ந்து கிழக்கு பிராந்திய கடற்படை தனது ஆழ்கடல் கப்பல்கள் இரண்டை அனுப்பி மார்ச் 03 ஆம் திகதி காலை அந்த கப்பலை திருமலை துறைமுகத்திற்கு இழுத்துச் சென்றிருந்தனர்.

> **கடந்த மாத இறுதிப் பகுதியில் நடைபெற்ற முகமாலை சமர், மணலாற்றில் நடைபெற்ற வான் தாக்குதல், படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ள தகவல்கள் என்பன போர் தொடர்பாக தென்னிலங்கை மக்களின் மனங்களில் உருவாக்கப்பட்ட விம்பங்கள் முற்றாக தகர்த்துள்ளன.**

இந்த சம்பவமானது இலங்கை அரசின் கடற்கண்காணிப்பு தொடர்பாகவும், அதற்கு உதவிவரும் இந்திய கடற்படையினரின் கண்காணிப்பு வலிமை தொடர்பாகவும் பெரும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது.

அதாவது முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து 150 கடல் மைல் தொலைவில் உள்ள ஆழ்கடலில் பத்து நாட்களுக்கு மேலாக தத்தளித்த 91 பேரை ஏற்றிச் செல்லும் பெரிய றோலரை கண்டறிய முடியாத ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல்களும், கரையோர கண்காணிப்பு விமானங்களும் அதிக எச்சரிக்கையுடன் நகரும் விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல்களை கண்டறிவது சாத்தியமானதா? என்ற கேள்விகள் அன்று படைத்துறை அவதானிகள் மட்டத்தில் பலமாக எழுந்திருந்தது.

எனவே விடுதலைப் புலிகள் கடந்த இரண்டு மாதங்களில் மூன்று கப்பல் ஆயுதங்களை தரையிறக்கி உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனிடையே விடுதலைப்புலிகள் மிகவும் செயற்திறன் உள்ள ராகவன், சமாதானம், பசீலன் ஆகிய எறிகணைகளை தமது படையணிகளின் பயன்பாட்டில் இணைத்துக் கொண்டுள்ளதாகவும் முகமாலை சமரில் அவர்கள் ராகவன் ரகத்தைச் சேர்ந்த 60 மி.மீ. எறிகணைகளை அதிகம் பயன்படுத்தியிருந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.



ஏறத்தாழ 2 கி.மீ. தூரவீச்சுக் கொண்ட இந்த மோட்டார்கள் சாதாரண 60 மி.மீ, 81மி.மீ எறிகணை செலுத்திகளுடன் விடுதலைப் புலிகளின் இலகு காலாட்படை பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இலகுரக குறுந்தூர மோட்டார்கள் படை நடவடிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

60மி.மீ. மோட்டார்களின் எறிகணைகளின் தாக்கு திறனை அதிகரிப்பது, அதன் நிறையை குறைப்பது தொடர்பான ஆய்வுகளுக்காக அமெரிக்க இராணுவமும் அண்மையில் பெருமளவான நிதியை ஒதுக்கியுள்ளது குறிப் பிடத்தக்கது. விரைவான படை நகர்வுகளின் போது பாரம் குறைந்த மோட்டார்களை இலகு காலாட் படையினர் களமுனைகளுக்கு காவிச் செல்வது இலகுவானது.

அதாவது தமது இலகு காலாட் படையினரின் தேவைக்கு ஏற்ப விடுதலைப்புலிகள் ராகவன் மோட்டாரை உற்பத்தி செய் துள்ளது. அதனை தற்போது நடை பெறும் சமர்களில் வெற்றிகரமாக பயன் படுத்தி வருவதும் குறிப்பிடத்தீக்கது. மேலும் இரணைமடுவில் உள்ள தமது விமான ஓடுபாதையை விடுத்தலைப் புலிகள் நீளமாக்கி வருவதாகவும் அதனை தமது கண்காணிப்பு விமானம் படம் பிடித்துள்ளதாகவும் படைத்தரப்பு புலனாய்வுத்துறை தெரி வித்துள்ளது.

கனரக விமானங்கள் தரையிறங்கும் வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வரும் இந்த விமான ஓடுபாதை தொர்பாக படைத் தரப்பில் பல சந்தேகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதாவது விடுதலைப்புலிகள் கனரக விமானங்களை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளார்களா? அல்லது இலங்கை வான்படையின் வளங் களை விரயம் செய்யும் உத்திகளை வகுத்துள் ளார்களா? என்ற காட்டமான சந்தேகங்கள் தெரி விக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு வருடங்களாக இலங்கை வான் படையினர் தொடர்ச்சியாக மேற் கொண்டு வரும் வான் தாக்குதல்கள் காரணமான விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதை பாரிய அழிவை சந்தித்துள்ளதாக செய்திகள் வெளியிட்டிருந்த நிலையில் தற்போது இரணைமடு விமான ஓடுபாதையை விடுதலைப்புலிகள் புனரமைத்து வருவது தொடர்பாக புலனாய்வுத் துறை தெரிவித்துள்ள தகவல்கள் பாரிய முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

களமுனை தொடர்பான அரசாங்கத் தரப்பு மேற்கொண்டு வந்த பிரசாரங்களை தற்போது அதன் புலனாய்வுத்துறையின் தகவல்கள் முறியடித்துள்ள வேளையில் அரசாங்கம் நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைத்துள்ளது. அரச நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் தொடர்பான அறிக்கையை தயாரித்து வரும் குழு தனது அறிக்கைகளை சமர்ப்பிக்க தொடங்கிய வேளையில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படடுள்ளதாக தென்னிலங்கை அரசியல் கட்சி ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவது அரசாங்கத்திற்கு தோன்றியுள்ள நெருக்கடிகளின் வெளிப்பாடாகும். 2001ஆம் ஆண்டு அரசிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சி அறிவித்ததைத் தொடர்ந்து அன்றைய அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்றத்தை ஒத்திவைத்திருந்தார். எனினும் அதன் பின்னர் வந்த தேர்தலில் அரசு தனது பெரும்பான்மையை இழந்திருந்தது.

**பாதுகாப்பு ஆய்வு**
**வேல்ஸிலிருந்து அருஷ்**

மஹிந்த அரசாங்கம் பதவியேற்ற இரண்டரை ஆண்டு காலத்தில் அது மேற்கொண்ட அரசியல் சாதனைகளை விட அது எதிர்கொண்ட நெருக்கடிகள் தான் ஏராளம். நாட்டின் பொருளாதாரம் அடிமட்டத்தை அடைந்துள்ளதுடன் அனைத்துலக மட்டத்தில் இலங்கை மிகப் பெரும் ஒரு அழுத்தத்தையும் சந்தித்து வருகின்றது. இந்த அழுத்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் அரசாங்கம் தெரிந்தெடுத்த வலிந்த போரே காரணம் என்றால் யாரும் அதனை மறுக்க முடியாது. ☒

# இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் மிகவும் மெத்தனமான போக்கைக் கடைப்பிடிக்கின்றன

## கனேடிய ஏடு விபரிப்பு

ஈரான்,சிரியா போன்ற நாடுகள் தொடர்பாக அமெரிக்க மற்றும் சர்வதேச ஊடகங்களும் காட்டிவரும் அக்கறையுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை விவகாரத்தில் மிகவும் மெத்தனமான போக்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை வெளிப்படையான உண்மை என்று கனேடியஏடான ''த ஸ்ரார்'' தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

''த ஸ்ரார்'' ஏட்டின் தலையங்கம் வருமாறு, இலங்கைத் தலைநகர் கொழும்பு போர் தொடர்பான சுவரொட்டிகளால் சூழ்ந்து காணப் படுகின்றது. இலங்கை வரைபடம் ஒன்றில் ''நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்கிறீர்களா? நீங்கள் எச்சரிக்கையுடன் இருந்தால் உங்களின் கிராமமும், நாடும் பாதுகாக்கப்படும்'' என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டிகளைக் காணக்கூடியதாகவுள்ளது. இராணுவம் முன்னேறி வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. வெற்றிபெற முடியாத போர் ஒன்றில்லை என ஊடகங்களில் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வளவு இழப்புகள் நேர்ந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என சூளுரைக்கப்படுகிறது.

இலங்கையின் வடபகுதியில் விடுதலைப் போராட்டம் நடத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் முன்நகர்வுகளை முடுக்கிவிட்டுள்ளன. எனினும், பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை தமிழர்களுக்கும் இடையில் கடந்த 25 வருடங்களாக நடைபெற்றுவரும் இந்தப் போர் காரணமாக சுமார் 70 ஆயிரம் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இலட்சக்கணக்கான தமிழர்கள் உலகம் முழுவதும் புலம்பெயர்ந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கனடா உள்ளிட்ட பல நாடுகளிலும் போரினால் பாதிக்கப்பட்ட தமழ் அகதிகள் வியாபித்துள்ளனர். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிற்கும் இடையில்போர் பயங்கரவாதம் தொடர்பான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ''எம்முடன் இணைந்து செயற்படப் போகிறீர்களா அல்லது எதிராகச் செயற்படப் போகிறீர்களா?'' என்பதே கொழும்பு அரசாங்கத்தின் அடிப்படை கொள்கையாக தெரிவிக்கப்படுகின்றது.

போர் முன்னெடுப்புக்களின் போது இலங்கை அரசாங்கத்தின் நேர்மை குறித்து பல சந்தர்ப்பங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் போர் முன்னரங்கப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.கடுமையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பதிவாகின்றபோதிலும் இதுவரையில் அதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கடந்த வருடத்தில் இலங்கையில் காணாமல் போனோரின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துக் காணப்படுவதாக வேறு எந்த நாட்டிலும் இவ்வாறானதொரு நிலைமை காணப்படவில்லை எனவும்

களும் காட்டிவரும் அக்கறையுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை விவகாரத்தில் மிக மெத்தனமான போக்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை வெளிப்படையான உண்மை.

இலங்கையில் நடைபெற்று வரும் போரின் விளைவுகள் உலகம் முழுவதும் பரவி வியாபித்துள்ளது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. கனடா உள்ளிட்ட பல நாடுகளில் இலங்கையின் இனப்பிரச்சினையின் அழுத்தமான அதிர்வுகளை உணரக் கூடியதாக உள்ளது. இலங்கையின் எந்தப் பகுதியிலும் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என மேற்குலக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் இன அடக்குமுறை அரங்கேற்றப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். அனேகமான தமிழர்கள் இந்தியா,

ளர்களுக்கு எவ்வித அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை எனவும் அவர் கனேடியத் தூதுவரிடமும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நோர்வே அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதான முன்னெடுப்புக்களை மீளத் தொடரக் கூடிய எவ்வித சாத்தியக் கூறுகளும் இல்லை.

இந்த சமாதான முன்னெடுப்புகளுக்கு கனேடிய அரசாங்கமும் ஆதரவு வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. விடுதலைப்புலிகளை தீர்த்துக் கட்டுவதில் அரசாங்கம் அதிகம் முனைப்புக் காட்டிவருகின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறான முயற்சிகள் தோல்வியில் முடிவு பெற்றன.

எனினும், இந்த அரசாங்கம் அதிக வளங்களைத் திரட்டி போர் முன்னெடுப்புகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. வட

## சமாதானம் குறித்த முனைப்பு இருதரப்பினரிடமும் வெகுதொலைவில்

ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டு கின்றது.

படுகொலைகள் மற்றும் கப்பம் பெறுவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் என்பவற்றுடன் அரசாங்கத்திற்கும் துணை இராணுவப் படையினருக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட தரப்புகள் குற்றம்சாட்டுகின்றன.

மேலும் தமிழர் பிரதேசங்களுக்கு செல்லும் படைத்தரப்பினர் மிக மோசமான வகையில் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது.எனினும், இந்த நிலைமைகள் குறித்து இதுவரையில் சர்வதேச சமூகம் உரிய முனைப்புக் காட்டியதாக தென்படவில்லை.

ஈரான்,சிரியா போன்ற நாடுகள் தொடர்பாக அமெரிக்க மற்றும் சர்வதேச ஊடகங்

மத்திய கிழக்கு உள்ளிட்ட பல நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர். இந்த நிலைமை குறித்து அரசாங்கம் எவ்வித கவனமும் செலுத்துவதாக தென்படவில்லை. இந்த அரசாங்கம் தமிழர்களை கைதுசெய்து விசாரித்து வருவதாகவும் மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் கனேடியத் தூதுவர் அன்சலா பொக்டனிடம் தெரிவித்துள்ளார்.

''நான் வன்முறைக்கு எதிர்ப்புத் தெரி விக்கின்றேன். குண்டுவெடிப்புகள் இடம் பெறக்கூடாது என்பதே எனது அபிப்பிராயம்'' என மனோகணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பயங்கரவாத செயல்களை காரணம் காட்டி பெரும் திரளான தமிழர்கள் கைது செய்யப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கைதுசெய்யப்பட்டவர்களின் உறவி

போர்க்கள முனையில் இராணுவத்தினரது முன்நகர்வுகள் விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய சாத்தியமில்லை என பிரசல்சை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மனிதாபிமான உதவிகளின் தேவை பல்கிப் பெருகியுள்ளதாகவும் இரு தரப்பினராலும் பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் மேற்கொண்டுவருவதாகவும் குறித்த சர்வதேச அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

சமாதானம் குறித்த முனைப்பு இருதரப்பினரிடமிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுள்ளதாகவே கருதுகின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹிலாரி துணை ஜனாதிபதியாக போட்டியிட வாய்ப்பு அளிப்பேன் என்கிறார் ஒபாமா

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் வேட்பாளராக தேர்ந்தெடுப்பதற்கான போட் டியில் ஒபாமாவும், ஹிலாரியும் இன்னும் பந்தயத்தில் இருக்கிறார்கள். ஹிலாரியை விட ஒபாமாவுக்கு தான் அதிக வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.



இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளருக்கான தேர்தலில் நான் வெற்றி பெற்றால் துணை ஜனாதிபதியாகப் போட்டியிடும் வேட்பாளராக நான் ஹிலாரியை தேர்ந்து எடுப்பேன் என்று ஒபாமா கூறியிருக்கிறார். அவர் டி.வி .சேனலுக்கு அளித்தபேட்டியில் துணை ஜனாதிபதியாக இருப்பதற்கு அவர் முழுத் தகுதி படைத்தவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை ஹிலாரி ஓய்வு இல்லாது உழைக் கக் கூடியவர். புத்திசாலி திறமையானவர் என்று குறிப்பிட்டார். (ஓ-5)

## 71 வயதில் 71 நாட்கள் நடந்து சென்று சிறையில் இருக்கும் மகனைப் பார்த்த மனிதர்

(சீனா)

சீனாவைச் சேர்ந்தவர் ஷீ பெய். இவர் ஒரு வழக்கில் சிக்கி ஜெயில் தண்டனை பெற்று சிறையில் இருக்கிறார். அவரது 71வயது தந்தை அவரை பார்க்க விரும்பினார். அன் கவ் மாநிலத்தில் உள்ள அவருடைய சொந்த கிராமமான டாய்கேயில் இருந்து 965 கி.மீ. தொலைவில் உள்ள லியாங்பிங் நகரில் உள்ள சிறைக்கு சென்று மகனை பார்ப்பதற்கு புறப்பட்டார். அந்த நகரம் குவாங்டோங் மாநிலத்தில் உள்ளது. அவர் ரெயில் மூலம் செல்ல திட்டமிட்டார். வீட்டில் இருந்து புறப்பட்டதும் அவர் வைத்து இருந்த பணப்பையை யாரோ திருடிச்சென்று விட்டனர். இதனால் வழிச்செலவுக்கு அவரிடம் பணம் இல்லாமல் போய்விட்டது. இதனால் அவர் மனம் தளரவில்லை. நடந்து சென்றே மகனை பார்ப்பது என்று அவர் தீர்மானித்தார்.

அவர் நடக்கத் தொடங்கினார். வயிறு பசித்த போது பிச்சை எடுத்து சாப்பிட்டார். சில நேரங்களில் குப்பைத் தொட்டியில் கிடக்கும் அழுகிய பழங்கள், சாப்பாடு ஆகியவற்றை எடுத்து சாப்பிட்டார். கிட்டத்தட்ட 71நாட்கள் நடந்து அவர் சிறைக்கு சென்று மகனை பார்த்தார். மகனை கடந்த 2ஆண்டுகளாக பார்க்கவில்லை. அதனால் தான் சிறைக்கு வந்து அவனை பார்க்க விரும்பினேன் என்று அவர் தெரிவித்தார். சிறையில் இருப்பதற்காக கவலைப்படாதே என்று தைரியம் கொடுத்தேன் என்கிறார்.

இது பற்றி ஷீ பெய் கூறுகையில், அவர் உண்மையிலேயே என்னை பெற்ற தந்தை அல்ல. வளர்ப்பு தந்தை தான். எனக்கு 10 வயது இருக்கும்போது என் பெற்றோர் இறந்து விட்டனர். அது முதல் அவர் தான் என்னை எடுத்து வளர்த்து வந்தார். என் மீது ரொம்பவும் பாசமாக இருப் பார். அவருக்கு திருப்பி என்ன செய்யப்போகிறேன் என்பது தெரியவில்லை என்று கண் கலங்குகிறார்.

71வயதான அவர் திரும்பிச் செல்வதற்கு சிறை அதிகாரிகள் உதவினார்கள். அவர்கள் எல்லோரும் சேர்ந்து பணம் திரட்டி ரெயில் டிக்கெட்டு வாங்கிக் கொடுத்தனர்.

(ஓ-5)

## 10 இலட்சம் பேர் உணவின்றி தவிப்பு; மியான்மருக்கு ஐ.நா சபை எச்சரிக்கை

வங்கக் கடலில் உருவான நர்கீஸ் புயல் கடந்த சனிக்கிழமை மியான்மர் நாட்டை தாக்கியது. 300பேர் பலியானதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் மீட்பு பணிகள் நடந்த பின்னர் சாவு எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருப்பது தெரியவந்தது.

சுமார் 2இலட்சம் வீடுகள் புயலின் கோர தாண்டவத்தில் அழிந்து விட்டன. 10லட்சம் பேர் உறவினர்களை இழந்து உணவு, உடை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் முன் வந்தன.

ஆனால் மியான்மர் நாட்டின் இராணுவ ஆட்சியாளர்கள் அதற்கு அனுமதி வழங்கவில்லை. இந்தியா, தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் முதல் கட்ட உதவிகளை மட்டும் ஏற்றுக் கொண்டனர். எனவே இந்தியா தொடர்ந்து மருந்து மற்றும் உண வுப் பொருட்களை விமானங்களில் அனுப்பி வருகிறது. அமெரிக்கா தனது 4பிரமாண்ட கப்பல்களை மியான்மர் அருகே உதவ நிறுத்தி உள்ளது. பிரான்ஸ் 15ஆயிரம்தொன் உதவிப் பொருட்களுடன் ஒரு பெரிய கப்பலை அனுப்பி உள்ளது. ஐ.நா.சபை உலக உணவு திட்டத்தின் கீழ் 38தொன் உயர் சக்தி பிஸ்கட்டுக்களை அனுப்பி உள்ளது. இவை அனைத்தும் ஒரு இலட்சத்துக்கும் மேற் பட்ட மக்களுக்கு மிக வும் பயன் உள்ளதாக இருக்கும். ஆனால் இவற்றை பெறாமல் மியான்மர் அரசு தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறது. இதற்கு ஐ.நா.சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு உதவிக் குழுக்களுக்கு மியான்மர் அனுமதி கொடுக்க வேண்டும். இல்லையெனில் கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என்று ஐ.நா. சபை



செய லாளர் பான் கீ- மூன் எச் சரித்துள்ளார்.

வெளிநாட்டு உதவிக் குழுக்களை மியான்மர் ஏற்காததால் பிரான்ஸ் ஆவேசம் அடைந்துள்ளது. மியான்மர் அரசை எதிர் பார்க்காமல் அதிரடியாக அந்த நாட்டுக்குள் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று பிரான்ஸ் யோசனை கூறியுள்ளது. ஆனால் இதை ஐ.நா.சபை ஏற்கவில்லை. மியான்மரை பணிய வைக்கும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. (5)

## கையடக்க தொலைபேசி மூலம் இளைஞர்களை அணுக பாப்பரசர் திட்டம்

(வத்திக்கான்)

பாப்பரசர் பதினாறாம் ஆசீர் வாதப்பர் எதிர்வரும் ஜுலை மாதம் சிட்னியில் நடைபெறும் உலக இளைஞர் தின விழா கொண்டாட்ட கால கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க இளைஞர்களுக்கு கையடக்க தொலை பேசி மூலம் எழுத்துவடிவிலான நற்செய்திகளை அனுப்பவுள்ளார்.

இதன் பிரகாரம் 6 நாட்கள் நடைபெறும் இந்த உலக இளைஞர் தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் 2 இலட்சத்து 25 ஆயிரம் கத்தோலிக்க இளைஞர்களுடன் கையடக்க தொலைபேசி மூலம் இணைப்பு ஏற்படுத்த கத்தோலிக்க திருச்சபை தீர்மானித்துள்ளது. (5)

நீ எதை விழுங்க முடியும் ,உன்னை எது - விழுங்க முடியும் என்பதை நீ பார்க்கவேண்டும்
-இந்தியா

வலம்புரி

# ஒருபுறம் வாக்களிப்பு மறுபுறம் குண்டுவெடிப்பு

கிழக்கில் நேற்று மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

அதற்கு முதல்நாள் அம்பாறையில் உணவகம் ஒன்றில் குண்டு வெடித்துள்ளது. கிழக்கில் தேர்தல் நடத்துவதன் மூலம் நாட்டில் இனப் பிரச்சினையை தீர்த்துவிட்டது போல உலகிற்கு காட்சிப்படுத்த முற்படும் இலங்கை அரசின் செயலுக்கு பதிலடியாக அம்பாறை குண்டு வெடிப்பை கருதிக்கொள்ளலாம்.

இவை ஒருபுறமிருக்க நேற்றுக் காலை; திருகோணமலையில் இலங்கை அரசுக்கு சொந்தமான ஆயுதக் கப்பல் ஒன்று விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டார்கள், அந்த அமைப்பில் மிகக் குறைந்த அங்கத்தவர்களே இருக்கின்றனர். அவர்களையும் மிக விரைவில் ஒடுக்கிவிடுவோம் என்பது அரசினதும் படைத்தளபதிகளினதும் அறிவிப்பாக இருக்க நேற்று அதிகாலை, கடற்படையின் கோட்டையாக இருக்கக்கூடிய திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நின்ற ஆயுதக்கப்பலை குண்டு வைத்து தகர்ப்பதென்பது சாதாரணமான விடயமல்ல.

இத்தகையதொரு சம்பவத்தை திரைப்பட கற்பனைக்கதைகளில் காணமுடியுமே அன்றி அதனை நிஜத்தில் காண்பது அரிது. இருந்தும் மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய வகையில் திருகோணமலை துறைமுகத்தில் வைத்து அரசுக்கு சொந்தமான ஆயுதக் கப்பலை விடுதலைப் புலிகள் தாக்கி நிர்மூலமாக்கியுள்ளனர். இதன் மூலம் அவர்கள் தமது பலம் குறையவில்லை என்பதை நிரூபித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளைக் கிழக்கிலிருந்து விரட்டி, அங்கு தேர்தலை நடத்துகிறோம் என்ற அரசின் அறிவிப்பிற்கு யுத்தக்கப்பல் மீதான தாக்குதல் சம்மட்டியால் அடிகொடுத்தது போல அமைந்து விட்டது.

எனவே அரசின் பிரசாரங்கள், அறிவிப்புக்கள், சூளுரைகள் அனைத்துமே யதார்த்தமற்றவை; வெறும் போலிகள். இவற்றை நம்பிய சிங்கள மக்கள் நாளாந்தம் தமது வாழ்வின் பெறுமானங்களை இழந்து வருகின்றனர்.

அதேபோல் உலக நாடுகளும் அரசின் பிரசாரங்களை நம்பி தமது உதவிகளை வழங்கி ஏமாறுகின்றன.

ஆனால், இலங்கையின் எதிர்கால ஆரோக்கியம் கிழக்கு தேர்தல் மூலமாக மேலும் பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறது என்பதையே குண்டு வெடிப்புகள் குறிப்பிட்டு காட்டுகின்றன.

# ஈரான் மற்றும் அமெரிக்காவுடன் சுமுகமான உறவைப்பேண அரசு முயற்சி

(கொழும்பு)

ஈரானுடன் இலங்கை ஏற்படுத்தியிருக்கும் உறவுமுறைகுறித்து அமெரிக்கா கவனம் செலுத்தியிருப்பதுடன் அமெரிக்காவுடனான நட்புறவை முறித்துக் கொள்ளாதவகையில் செயற்படுவதற்கு இலங்கை தீர்மானித்திருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானிய ஜனாதிபதி மகமூட் அகமதி நிஜாட் கடந்த மாதம் இலங்கை வந்திருந்ததுடன் இலங்கையின் மின் உற்பத்தி மற்றும் எரிபொருள் சுத்திகரிப்பு போன்றவற்றிற்கும் பெரும் பணம் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் இலங்கையும் ஈரானும் இரகசிய இராணுவ ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருப்பதாக வெளியான அறிக்கை குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தியிருப்பதாக தெரியவருகிறது.

இலங்கையின் சக்தி வலு அதிகரிப்புக்கு ஈரானுடன் நட்பு பாராட்டவேண்டிய நிலையில் இருக்கும் இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு அமெரிக்காவுடனான உறவை பேண வேண்டியுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு இரண்டு நாடுகளுடனும் சுமுகமான உறவுகளை பேணுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஈரானுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக அரசாங்கத்தில் இருக்கும் குழுவொன்று தீர்மானம் ஒன்றை முன்வைத்த போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை நிராகரித்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதிஷ்டவசமாக இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பை விட பொருளாதாரரீதியாக ஒத்துழைப்புகளையே பேணுவதற்கு ஈரான் அரசாங்கமும் விரும்புவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதாக தொடர்ச்சியாக குற்றம் சாட்டிவரும் அமெரிக்கா ஈரானுடனான உறவுகளை பேணுவதை தவிர்க்குமாறு உலக நாடுகளை வலியுறுத்தி வருகிறது. ஈரானுடன் இலங்கை ஏற்படுத்தியிருக்கும் உறவு நிலை தொடர்பாக அமெரிக்கா அதிருப்தியடைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (5)

# சம்பள நிர்ணய ஆணைக்குழுவுடனான சந்திப்பிலிருந்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வெளியேற்றம்

அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அறிவிக்கப்படும் என்கிறார் ஸ்ரான்லின்

(கொழும்பு)

ஆசிரியர்கள் அதிபர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கும் தேசிய சம்பள நிர்ணய பதவி ஆணைக்குழுவிற்கும் இடையே நடைபெற்ற சந்திப்பு திருப்தியளிக்காத நிலையில் சந்திப்பிலிருந்து ஆசிரியர் தொழிற் சங்கங்கள் வெளியேறியுள்ளன.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் உள்ள சம்பள நிர்ணய ஆணைக் குழுவின் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை 10 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் இருந்தே ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வெளியேறியுள்ளன. மேற்படி சந்திப்பின் போது கூட்டம் ஆரம்பித்து 25 நிமிடத்துக்குள்ளேயே தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் ஆணைக் குழுவினருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற் பட்டதைஅடுத்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வெளியேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசப் ஸ்ரான்லின் கருத்து தெரிவிக்கையில், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக கல்வியமைச்சரால் முன்வைக்கப்பட்ட தீர்வையோ அல்லது ஆசிரியர் தொழிற்சங்கம் முன்வைத்த கருத்துக்களையோ தேசிய சம்பள நிர்ணய பதவியாளைக்குழு கருத்தில் கொள்ளவில்லை.

கடந்த மார்ச் 4 ஆம் திகதி ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு கையளிக்கப்பட்ட ஆலோசனைகளில் எந்தவித மான மாற்றங்களோ முன்னேற்றமோ காணப்படவில்லை. ஆசிரியர்களின் சம்பள பிரச்சினையை காலம் தாழ்த்தி தனது கருத்தை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலேயே தேசிய சம்பள நிர்ணய பதவி ஆணைக் குழு அக்கறை காட்டி வருகிறது. இந்த நிலையில் தொடர்ந்தும் ஏமாற்றப் படுவதிலேயோ ஏமாறுவதிலேயோ அர்த்தமில்லை. அடுத்த வாரம் நடை பெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பில் ஆசிரியர் தொழிற் சங்கங்களின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்படும் எனத் தெரிவித்தார். (5)

# தேவையான தகுதிகளை பூர்த்தி செய்தால் ஏற்றுமதி வரிச்சலுகை இலங்கைக்குகிடைக்கும்

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகச் சலுகையான ஜி எஸ்பி பிளஸ் நீடிப்பை பெறுவதற்கான தகுதியை இலங்கை அரசாங்கம் பெற்றால் அது வர்த்தக சலுகை நீடிப்பைப் பெறும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் ஜூலியன் வில்சன் தெரிவித்துள்ளதாவது, இந்த நீடிப்பு தேவை எனில் அரசு அதற்கான தகுதி யைப் பெறவேண்டும். அதற்காகஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுடன் நெருக்கமாக பணியாற்றும். ஐரோப் பிய ஒன்றியத்துடனான வர்த்தக உடன்படிக்கையை நீடிப்பது தொடர்பாக உள்ளூர் ஊடகங்களில் பல தரப்பட்ட குழப்பமான செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் உண்மை என்னவெனில் இலங்கையுடனான வர்த்தக உடன்படிக் கைகளை மேலும் 3 வருடங்களுக்கு நீடிப்பதையே ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகின்றது.

கடந்த சில வருடங்களில் ஐரோப்பிய ஒன்றியம் அபிவிருத்திக்காக 1 பில்லியன் டொலர்களை இலங்கை அரசிற்கு கடனாகவும் உதவியாகவும் வழங்கியுள்ளது. இந்த வருடமும் மனிதாபிமான மற் றும் அபிவிருத்தி கடன் உதவியாக 100 மில்லியன் டொலர்களை வழங்குவதற்காக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதி உதவிகள் எதிர்வரும் இரு வருட அபிவிருத்திகளுக்காக செலவு செய்யப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார். இதனிடையே ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தச் சலுகைகளை நீடிக்கும் பொருட்டு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு தயாராக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (5)

# தூய ஆவியின் அரவணைப்புக்காக

நம் மீது அளவற்ற அன்பு கொண்டுள்ள இறைவன் நமக்களித்துள்ள கட்டளைகள் வாயிலாகத் தம் அன்பை வெளிப்படுத்தியுள்ளார். எதையெல்லாம் செய்ய அனுமதியுண்டு எதைச் செய்ய அனுமதி இல்லை என்று மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வுலகில் இருவிதமான மகிழ்ச்சிகள் உள்ளன. தூய ஆவியால் மகிழ்ச்சி தூய ஆவி இல்லாத மகிழ்ச்சி அதாவது ஆண்டவர் அளிக்கும் மகிழ்ச்சியின் ஆண்டவரிடமிருந்து வராத மகிழ்ச்சி. ஆண்டவரிட மிருந்து வராத



மகிழ்ச்சியின் மீது நாட்டம் கொள்வது தான் பாவம். விலக்கப்பட்ட கனியைஉண்ணக் கூடாது என்று ஆண்டவர் கூறியிருந்த போதும் அதை உண்டதுதான்முதல்பெற்றோர்செய்த பாவம். அது ஆண்டவரிட மிருந்து வராத மகிழ்ச்சியை நாடியதாகும். அவ்வா றான மகிழ்ச்சியை நாம் நாடக் காரணம் அது தற்கால சுகம் அளிப் பதால்தான்.

தற்கால சுகத்தை நாடிப் பாவம் செய்பவர்களுக்கு ஏற்படும் நிலையைத் திருவசனம் மிகத் தெளிவாக விளக்கி யுள்ளது. 'சிலர் தங்கள் தீய நெறிகளை முன்னிட்டு நோய்களுக்கு உள்ளாயி னர் அவர்களுடைய தீச் செயல்களின் பொருட்டுத் துன்பங்களுக்கு உள்ளாயி னர். எல்லா உணவையும் அவர்களின் மனம் வெறுத்தது. சாவின் வாயில்களை அவர்கள் நெருக்கினார்கள்' (திபா 107:17-18) நெறிதவறிய வாழ்வால் சாவை வரவேற்றுக் கொள்ளாதீர்கள் உங்கள் செயல்களாலேயே அழிவை வருத்திக் கொள்ளாதீர்கள். (சாஞ1:12) நமது வாழ்க்கையில் ஏற்படும் துன்ப துயரங்கள், எமாற்றம் சாவுக்குக் கார ணம் பாவமே பாவத்திற்கு கிடைக்கும் கூலி சாவு (உரோ6:23)

இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தது பாவம் செய்த நம்மைத் தண்டிப்பதற்காக அல்ல. மாறாக பாவத்திலிருந்து நம்மை மீட்பதற்காகவே கடவுள் நம்மைத் தண்டிப்பது மில்லை சோதிப்பது மில்லை 'சோதனை வரும் போது இச் சோதனை கடவுளிடமிருந்து வருகிறது' என்று யாரும் சொல்லக்கூடாது. ஏனெனில் கடவுள் தீமையின் தூண்டுதலுக்கு உள்ளாவதில்லை. அவரும் எவரையும் சோதிப்பதில்லை. ஒவ்வொருவரும் தம் சொந்தத்தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர்' (யாக் 1:13-14) நமது பாவங்கள் தான் நமது அழிவுக்குக் காரணம். நமது தீய நாட்டங்கள் தான் நமது ஏமாற்றத்திற்கான காரணம். இறைவன் தமது உருவிலும் சாயலிலும் மனிதனைப் படைத்தார். தமது ஆவியை அளித்து அவனுக்கு உயிர் கொடுத்தார். அவனோடு வாழ விரும்பினார். இறைவன் வாசம் புரிந்த போதே மனிதனை இறைவனிடமிருந்து பிரித்த தீய சக்தி தான் விலக்கிய கனியை உண்ணுமாறு அலகை தூண்டியது. மனிதனும் பாவம் செய்து இறைவனின் சாயலை இழந்தான்.

இன்று நாம் அனுபவிக்கும் துன்பங்கள் இறைவனிடமிருந்து வந்தவையல்ல. நமது பாவம் தான் அதன் காரணம். பாவம் செய்பவன் பாவத்திற்கு அடிமையாகிறான் அலகைதான் எல்லாத் துன்பங்களுக்கும் ஏமாற்றத்திற்கும் காரணம் அலகையின் செயல்களை அழிப்பதற்காகத்தான். இறைமகன் இவ்வுலகிற்கு வந்தார் என்று திருவிவிலியம் கற்பிக்கின்றது. கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை.. ஏனெனில்'கடவுளின்இயல்புஅவரிடம்இருக்கிறது' (1யோவா 3:9). எனவே நாம் பாவம் செய்யும் போது அலகையின் செய லைத்தான் நாம் செய்கின்றோம். எனவே நாம் இறைவனோடு இணைந்த நிலையில் தான் இருக்கவேண்டும். பாவத்தை யும் அலகையையும் விட்டு விலக வேண்டும். தூய ஆவியரால் இயக்கப்பட வேண்டும். அதற்கான அருளை ஆண்டவர் நமக்கு அளிக்க வேண்டுமென்று மன்றாடுவோம்.

க.அருள்நேசன், குருநகர்.

# பரமபிதா காட்டிய பாதை

# மோசமான தேர்தலென எதிர்க்கட்சிகள் விசனம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மோசமான தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நேர்மையானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரச தரப்பு அமைச்சர்கள் தமது அடியாட்களைப் பயன்படுத்தி வாக்களிப்பு நிலையங்களில் வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டனர் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

கிழக்கு மாகாண சபைத்தேர்தல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில், தேர்தல் நடைபெற்ற மூன்று மாவட்டங்களிலும் அரசாங்கம் தனது பூரண சக்தியை பயன்படுத்தி தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டது.

வாக்காளர்களை பயமுறுத்துதல், தாக்குதல், வாக்குகளை பலவந்தமாக செலுத்துதல் உட்பட பல மோசடி நடவடிக்கைகள் தாராளமாக இடம்பெற்றுள்ளன.

தெஹியத்தகண்டிய பகுதியில் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு அதிகாரிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் கள்ளவாக்குகளை செலுத்த முயன்றுள்ளனர் எனத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில், கிழக்கு மாகாண சபைத்தேர்தலின் போது பரவலாக ஆளும் கட்சி வேட்பாளர்களின் குண்டர்களாலும் அரசாங்க அமைச்சர்களின் ஏவலாட்களாலும் வாக்களிப்பு நிலையங்களில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இவை பற்றி தேர்தல் ஆணையாளருக்கும் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ந-5)

## படையினரின் ஐந்து சடலங்கள் ச.செ.சங்கத்திடம் கையளிப்பு

(கிளிநொச்சி)

மன்னாரில் படையினர் பெருமெடுப்பில் மேற்கொண்ட முன்னகர்வினை தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடித்தபோது நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட படையினரின் ஐந்து சடலங்கள் அனைத்துலக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ந-5)

## ஜனநாயகத்துக்கு..

தெரிவித்தார்.

தேர்தல் வாக்களிப்பு முடியும் வரை தாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்ததாக அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலையோ வாக்களிப்பையோ பாதிக்கக்கூடிய எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.

பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக மேற்கொண்டதாலும் அதிகாரிகளும் அவர்களது கடமைகளை உரிய முறையில் மேற்கொண்டதாலும் அசம்பாவிதங்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படவில்லை என்றும் அமைச்சர் கூறினார். (ந-5)

## சி.டி.எம்.ஏ. செயலிழப்பு

யாழ்ப்பாணம் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா ரெலி கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ இணைப்பு நேற்று முதல் செயலற்று போயுள்ளது.

சி.டி.எம்.ஏ இணைப்பு அலையில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ் இணைப்பு செயலற்றுப் போயுள்ளதாக தெரிவித்துள்ள சிறிலங்கா ரெலிகொம் வட்டாரங்கள் திருத்த வேலைகள் இடம் பெற்று வருவதாக குறிப்பிட்டன. (ந-5)

## முறைகேடுகள்..

இதனை அடுத்து இந்த வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய்வதற்காக தேர்தல் ஆணையாளர் விசேட விசாரணை ஒன்றை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்கையில், தேர்தல் வன்முறைகள் குறித்து விசாரணைகளை நடத்த உடனடியாக நாடாளுமன்றத்தை கூட்டுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்க விருப்பதாக கட்சி வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தேர்தல் வன்முறை குறித்த தனது எதிர்ப்பை வெளிப்படுத்த தயாராக இருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5)

## வன்முறைகள்; மோசடிகள் மத்தியில்...

பெட்டிகளும் வாக்குச் சீட்டுக்களும் அனுப்பப்பட்டதாலும் அங்கேயே வாக்கு கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாலும் இந்துக் கல்லூரிக்குள்ளும் வெளியிலும் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். அங்கு கடமைக்குச் சென்ற அரச உத்தியோகத்தர்களும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்துக் கல்லூரியை சுற்றியுள்ள திருமலை வீதி, புகையிரத நிலைய வீதி, தாமரைக்கேணி வீதி ஆகியவற்றில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று சனநடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது. பஸ் போக்குவரத்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இடம்பெற்றது. அநேகமான வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டிருந்தன. நண்பகலுக்கு பின்னர் சன நடமாட்டம், வாகனப்போக்குவரத்தில் மேலும் மந்த நிலை காணப்பட்டது. திறக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களும் நண்பகலுடன் மூடப்பட்டன.

இதேவேளை, காத்தான்குடி காங்கேயனோடையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மீது அசிட் வீசியதில் 6 பேர்வரை காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் ஏறாவூரில் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் கள்ளவாக்குப் பதிவில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டி ஐக்கிய தேசியக்கட்சியினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, ஓட்டமாவடி செம்மனோடையில் வாக்களிப்பு நிலைய முகவர் ஒருவரது வீட்டின் மீது ஆளும் கட்சியினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காவத்தமுனையில் ஐக்கிய தேசியக் கட்சியினரால் வாக்களிப்பு நிலையமொன்றில் தகராறு மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அம்பாறையில்

அம்பாறை மாவட்ட மக்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும் ஆர்வத்துடனும் வாக்களிப்பில் கலந்து கொண்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளிலும் இருந்து அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணுவதற்காக 26 வாக்கு எண்ணும் நிலையங்களும் தபால் மூல வாக்குகளை எண்ணுவதற்காக 4 மத்திய நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

நேற்றைய வாக்களிப்பின் போது இம்மாவட்டத்தில் சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேச முஸ்லிம் தமிழ் கிராமங்களில் நடைபெற்ற வாக்குப் பதிவுகளின் பிரகாரம் சராசரியாக முஸ்லிம் பகுதிகளில் சுமார் 70 வீதமான வாக்களிப்பும் தமிழ் பிரதேசங்களில் 60 வீதமான வாக்களிப்பும் நடைபெற்றுள்ளதாக உத்தியோகப் பற்றற்ற அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இத்தேர்தலைப் பொறுத்த மட்டில் வழமைக்கு மாறாக இம்முறை வாக்குச் சாவடி நிலையங்கள் தூரமாக அமைக்கப்பட்டிருந்தமையால் வாக்காளர்கள போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அத்துடன் தேசிய அடையாள அட்டை மற்றும் ஆட்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களை வைத்திராத வாக்காளர்கள் வாக்களிப்பதில் தடங்கல்களை எதிர்நோக்கினர்.

நிந்தவூர் போன்ற இடங்களில் அடையாள அட்டை இல்லாத சில வாக்காளர்களை பொலிஸார் திருப்பியனுப்பியதால் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசீமுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

அத்துடன் கல்முனைக்குடிப் பிரதேசத்திலுள்ள அல் பகரியா வித்தியாலயத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் வாக்களித்துவிட்டு பயணத்தைத் தொடர முற்பட்ட வேளையில் அருகே உள்ள வீதியில் இரு அரசியல் குழுக்களுக்கிடையே சச்சரவு ஒன்று ஏற்பட்டது.

மாவட்டத்தின் பாதுகாப்பு நிலை பற்றி குறிப்பிடும்போது சிறுசிறு சச்சரவுகளைத் தவிர பாரிய வன்செயல்கள் எதுவும் நடைபெறாத போதிலும் பன்னலகம என்ற இடத்தில் மோட்டார் குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

### திருகோணமலையில்

திருகோணமலை மாவட்டத்தில் 60 வீதமானோர் வாக்களித்துள்ளதாக திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.எஸ்.கே.பண்டார மாப்பா தெரிவித்தார்.

நேற்றுக்காலை திருகோணமலை, மூதூர், கிண்ணியா மற்றும் அதனை அடுத்துள்ள மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் சுறுசுறுப்பான வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.

எனினும் மதிய வேளையின் பின்னர் வாக்களிப்பு குறைந்த அளவிலேயே இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூரில் இடம்பெற்ற வன்முறையில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பிரதேச சபைத் தலைவர்ஒருவரது வீடு பொது மக்கள் சிலரால் தாக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

நேற்று மாலை 4 மணிக்கு வாக்களிப்பு முடிபடைந்ததைத் தொடர்ந்து திருகோணமலை நகரம் வெறிச்சோடியுள்ளது. நகரிலும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதேவேளை மூதூர் அக்கரைச்சேனைப் பகுதியில் நேற்று மாலை அமைச்சர் பாயிஸிற்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் அங்குள்ள மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் அவர்களை வீடொன்றினுள் முடக்கவும் முற்பட்டனர்.

எனினும் சிறப்பு அதிரடிப்படையினர் அமைச்சரையும் அவரது ஆதரவாளர்களையும் மீட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## கடற்படையின் ஆயுதக் கப்பல்...

கங்கை அமரன் நீரடிநீச்சல் பிரிவு கடற்கரும்புலிக் கொமாண்டோக்களே இந்தக் கப்பலை தாக்கியழித்தனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். நேற்று அதிகாலை2.15 மணியளவில் கடலுக்கடியில் இடம்பெற்ற தாக்குதலின் மூலமே இந்தக் கப்பல் வெடித்துச் சிதறி கடலில் 213 அடி ஆழத்தில் மூழ்கியதை கடற்படையினரும் உறுதி செய்தனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள படையினருக்கு தேவையான பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு செல்வதற்கு தயாராக நின்ற அ-520 என்ற கப்பலே கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்ற போதும் கடற்படையினர் அதனை உறுதிசெய்யவில்லை.

கப்பலின் நங்கூரப் பகுதியே கடற்கரும் புலிகளின் தாக்குதலில் வெடித்துச் சிதறியதாக தெரிவித்திருக்கும் கடற்படைத்தரப்பு, தாக்குதலுக்கு இலக்காகிய கப்பல் கடலில் மூழ்கியதாகவும் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து அனைவரினது கவனமும் திசை திரும்பியிருக்க நேற்று அதிகாலை கடற்கரும்புலிகள் நீருக்கு அடியால் வந்து கடற்படையின் விநியோகக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததால் திருகோணமலையில் நேற்று அதிகாலை பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து மேற்படி துறைமுகம் அமைந்துள்ள பகுதியில் மேலதிக பாதுகாப்புக்கள் போடப்பட்டு கடலில் கடும் தேடுதல்களும் இடம்பெற்றன.

ரஷ்யப் பிரஜை ஒருவருக்கு சொந்தமான இந்தக் கப்பல் 2003 ஆம் ஆண்டு சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஏற்றியவாறு இலங்கைக் கடற்பரப்பின் ஊடாக சென்று கொண்டிருந்த போது கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு திருகோணமலை துறைமுகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. எம்.வி.இன்வின்சிபிள் என்ற பெயருடைய கப்பல் சுமார் 80 அடி நீளம் கொண்டதாகும்.

இந்தக் கப்பல் 2007 ஆம் ஆண்டு அ-520 என்று பெயர் மாற்றப்பட்டு கடற்படையினரின் விநியோகம் மற்றும் ஆழ்கடல் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது.இந்நிலையிலேயே திருகோணமலை அஸ்ரப் துறைமுகத்தில் வைத்து இந்தக் கப்பல் தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 22 திகதி முல்லைத்தீவு நாயாறுக் கடலில் கடற்புலிகள் நீருக்கு அடியால் சென்று கடற்படையின் அதிவேக தாக்குதல் பீரங்கிப் படகொன்றை மூழ்கடித்ததோடு அதிலிருந்த 10 கடற்படையினர் காணாமல் போயிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை அஸ்ரப் துறைமுகத்தில் மூழ்கிய கப்பலில் இருந்து 10 கடற்படையினர் கடலில் குதித்து உயிர் தப்பியதாக கடற்படைப் பேச்சாளர் டி.கே. பி. தசநாயக்க தெரிவித்துள்ளார்.கமாண்டர் தசநாயக்க இது குறித்து மேலும் தெரிவித்ததாவது,

குறித்த கப்பல்,போக்குவரத்து சேவைகளிலும் சரக்குகளை ஏற்றி இறக்குவதிலும் ஈடுபட்டிருந்தது. 2003 ஆம் ஆண்டில் பாகிஸ்தானிலிருந்து இத்தாலிக்கு 254 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை கொண்டு சென்ற வேளையில் தங்காலைக்கு அப்பால் இக்கப்பல் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் 2005 ஆம் ஆண்டு கடற்படையினரிடம் கப்பல் ஒப்படைக்கப்பட்டது. இக்கப்பல் திருகோணமலை சீனன்குடா அஸ்ரப் இறங்குதுறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இக்கப்பலில் கடற்படையை சேர்ந்த 10 பேர் கடமையில் இருந்தனர்.

நீருக்கடியில் நடத்தப்பட்ட தாக்குதலினால் கப்பலில் பாரிய துவாரம் ஏற்பட்டது. கப்பல் மூழ்க ஆரம்பித்ததும் கப்பலில் இருந்த கடற்படையினர் ஆபத்தின்றி தப்பிவிட்டனர் என்றார்.

கடற்படையின் பாவனையில் இருந்த இக் கப்பல் 1970 ஆம் ஆண்டுகட்டப்பட்ட பழைய கப்பலாகும் எனத்தெரிவித்தார்.

இதேவேளை இக்கப் பலில் 3000 தொன் ஆயுதங்கள் ஏற்றப்பட்டிருந்ததாக சுயாதீன தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

மாவட்ட ரீதியிலான பரீட்சை
திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்
2008 தரம் : 4 வெற்றித்தேர்வு- 3
2008 தரம் : 5 வெற்றித்தேர்வு- 14
ஞாயிறு : 11.5.2008. 6am, 8am, 10am, 2pm, 4pm
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
வெளிமாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
பெறுமதியான பரிசுகள் காத்திருக்கின்றன.
திங்கள் சகல புத்தகசாலைகளிலும் பெறலாம்.
T.P.9016

GLOBAL
Multi Trade Center
College Road, Jaffna Hindu College Ground Junction, Jaffna.
→Sports → Electronics → Fancy
→ Shoes → Stationery
(பாடசாலை உபகரணங்கள்)
விற்பனை நடைபெறுகிறது
ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை 7.30 -மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்.
TP:-0777179461
Proprietor:- R.W.Jeffrey & K.Ramanan

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.